785 785

தொகுதி 11.] 1932ஹு டிசம்பர்மீ [பகுதி 1.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலையம், சென்னை.

# மாதவி மாதவன் 2-பாகம்

ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவாக் கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது. இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 2—0—0.

இரத்தினபுரி ரகசியம் 7-பாகம் விலை ரூபா 13-14-0

# அமராவதி 2-பாகம்.

ஆரணி-குப்புசாமி முதலியாரவர்களியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமு முடையவனுயிருந்தால், அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துக்களிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்ருய் நிரூபிக்கப்பட் டிருக்கின்றன. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இராஜாமணி

அல்லது

## ஓர் அபூர்வ மர்மம்

கற்புக்கரசியாகிய ஓர் உத்தமியின் சரித்திரத்தை மெத்தத் தெளிவாக விளக்கிக் காட்டக் கூடியது. இராஜாமணி யென்னும் பெண்மணி, பெருந்திருட்டும், மிகுந்த கொலைத் தொழிலுமுடைய ஒருவனுக்கு மகளாயிருந்தும், அவனைப்போலவே பெரும் பாதகச் செயல்களையுடைய ஒரு முரடனுக்குச் சகோதரியாயிருந்தும் அவர்களிடம் அகப்பட்டுப் பெரிய ஆபத்திற் சிக்கிய பூபாலம் பிள்ளை, யென்பவரைக் காப்பாற்றி அவருடன் தானும் வெளியேறி அவரை மணந்து கொள்வதும், மிக்க அதிசயம் பொருந்திய செயல்களாயும் படிப்போர் மனத்தைக் கவரக்கூடியதாயும் இருக்கும்.

இதன் விலை ரூபா 2-0-0.

---

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

OFFICE OF THE REGISTRAR OF ... 4-FEB1933 MADRAS



ஆனால் உடனே பதில் வரவில்லை. என்னமோ என்று திடுக்கிட்டாள். ஆயினும் கோகிலம் கதவைத் தட்டிய ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் அந்தக் கதவை நோக்கி யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்டது. சொற்ப நேரத்துக்குள் கதவும் திறக்கப்பட்டது, அவ்வீட்டின் சொந்தக்காரியான வயோதிகமாது கையில் விளக்குடன் எதிரில் நின்றாள். அம்மாதைக் கண்டதும் கோகிலம் மூச்சுவிடாமல் மேலும் பல கேள்விகளைக் கேட்டாள். அம்மாது அதற்கெல்லாம் அளித்த பதிலில் இருந்து தன் தாய் பிழைத்திருப்பதாகவும் ஆனால் அதிக நோயுடன் இருப்பதாகவும் அறிந்தாள். அக் குடும்பத்தினிடம் அனுதாபங்கொண்ட செல்வநாதர் அவர்களை வேறு நல்ல வீட்டுக்கு அழைத்துப்போக எண்ணியும் காணமற்போன கோகிலம் திரும்பி வந்தால தாயார் போனவிடம் தெரியாமல் தவிப்பாளே என்னும் காரணத்தால் அங்கேயே வைத்திருந்தார். ஆனால் அதே வீட்டில் மேல் மாடியில் நல்ல வசதியான இடத்தில் கோகிலத்தின் தாயும் சகோதரனும் இருந்தார்கள். இதையெல்லாம் விசாரித்து அறிந்து கொண்டதும் கோகிலம் மிக அவசரத்துடன் மாடிமீது ஏறிச்சென்று தன் தாயைக் கண்டு வணங்கினாள். தாயும் தன் அருமைக் குமாரியை அணைத்துக்கொண்டு சந்தோஷமடைந்தாள். கோகிலம் தன் வரலாற்றை யெல்லாம் விவரமாகத் தாயினிடம் தெரிவித்த பின், அப்பெண் வெளியே போகும்போது எவ்வளவு சுத்தத்துடன் போனாளோ அவ்வளவு பரிசுத்தமாகவே திரும்பி வந்திருக்கிறாள் என்பதை சந்தேகத்தில் தலைசிறந்த அம்மாது தெரிந்துகொண்டு சந்தோஷமடைந்தாள்.



186575
186575
சென்னை-600 003

## 44-வது அத்தியாயம்

### பள்ளக் குடிசையில் கொலே

கோகிலத்தை அடைத்து வைத்திருந்த கட்டடத்திலிருந்து அவளே மீட்ட தினத்தின் மறுநாள் இரவு பதினெரு மணிக்குமேல் நடுக் குப்பத்துக்கு அப்பால் கிளைப் பாதையினருகில் பள்ளத்திலுள்ள ஒரு குடிசையில், அதாவது இந்திராபாய் ராட்சஸகுப்பனே எந்த இடத்தில் கோபாலனுடைய துணையால்சந்தித்தாளோ அக்குடிசையில் ராட்சஸ குப்பன், குடிசையின் சொந்தக்காரனுகிய பாலு, அவனுடைய மனைவி ஆகிய மூவரும் மத்தியில் ஒருவிளக்கை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தனர். யாரேனும் சந்தேகப்பேர் வழி வந்தால் உடனே ராட்சஸ குப்பன் மறைந்துகொள்ளப் பின்னுவிருந்த அறையின் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்தது. ராட்சஸகுப்பனும், பாலுவும் சுருட்டு பிடித்துக்கொண்டிருந்தார்கள். பாலுவின் மனைவி தன் எட்டு அல்லது ஒன்பது மாதக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அம்மாது மிக்க அசுத்தமானவளாக இருந்ததால் அழகில்லாதவளைப்போல் காணப்பட்டாளே யொழிய உண்மையில் ஆபாஸமானவள் அல்ல. அம்மூவரும் ஏதேதோ பேசிக்கொண்டிருக்கையில் ராட்சஸ குப்பன், பாலுவின் மனைவியைப் பார்த்து, 'மாதே! நேற்று இரவு நான் வெளியில் சென்ற பிறகு மாகதம் வந்ததாகச் சொன்னுயே! அவள் மறுபடியும் இன்று வருவதாகச் சொல்லிப் போனுளா?' என்று கேட்டான். அதற்கு அம்மாது, 'ஆம், நேற்று இரவு என் புருஷன் கூட வீட்டில் இருக்கவில்லை. நான்

[stamp]

OFFICE OF THE REGISTRAR ... 4-FEB 1933 MADRAS



தனியாகத்தான் இருந்தேன். மரகதம் வந்திருந்தாள். மறுபடியும் வருவதாகச் சொல்லிப் போயிருக்கிறதால் இப்போது வரலாம். நீ இங்கேயே இரு' என்றாள்.

பிறகு அம்மூவரும் இந்திராபாயைப் பற்றிச் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். இந்திராபாயின் அழகையும், சாமர்த்தியத்தையும் கண்டு பாலுவும் அவனது மனைவியும் ஆச்சரியப்பட்டதால் இப்பேச்சு வந்தது. ராட்சஸ குப்பனும் அவளைப்பற்றித் தனக்கு அதிகமாக ஒன்றும் தெரியாதென்றும் ஆயினும் அவள் சிறிதும் காம உணர்ச்சியற்றவளாய் இருப்பதால் அது சம்பந்தமான சூழ்ச்சிகளோ தந்திரங்களோ அவளிடம் ஒன்றும் கிடையாதென்றும் ஆனால் பெரும்பாலும் ஆண்வேடமே போட்டுக்கொண்டு காலங் கழிப்பதாயும், அவளைப்பற்றி ஏதோ மர்ம மிருக்க வேண்டுமென்றும் கூறினான். அப்போது பாலுவின் மனைவி 'ஆ! அவ்வளவு அழகுடைய மாதை நான் எங்கும் பார்த்ததில்லை. அவளுடைய கண்களும், பற்களும் அதிக வசீகரமானவை. யௌவனமும் அழகும் வாய்ந்த ஒவ்வொரு பிரபுவும் அவளுடைய அழகான உதட்டில் முத்தமிட அதிக ஆவல் கொள்வான் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை' என்றாள். அப்போது ராட்சஸ குப்பன், 'இல்லை, முடியவே முடியாது. எவனாவது முத்தத்தைப் பெற விரும்புவானாயின் அவளது சாட்டையினின்றும் சரியான அடிதான் அவனுக்குக் கிடைக்கும். இவ்வளவு பரிசுத்தமாக இருக்கும் அவள் இப்படிப்பட்ட திருட்டுத் தொழிலை ஏன் எடுத்துக் கொண்டாள் என்பதுதான் தெரியவில்லை,' என்று கூறினான்.

இவ்வாறு பேசி முடிந்ததும் ராட்சஸ குப்பனுக்கு மரகதத்தின் ஞாபகம் வரவே அவன், 'இதென்ன? இவ்வளவு

நேரமாகியும் மாகதம் வரவில்லையே; நான் நல்லகாற்று வாங்குவதற்காக வெளியில் போகலாமென்று பார்க்கிறேன்' என்ருன். அப்போது பாலு என்பவன்,' 'ஆம்; உனக்கு நல்ல காற்று வேண்டியது தான். நமது பள்ளத்துக்கு அப்பாலுள்ள ரஸ்தாவில் சிறிது நேரம் உலாவிவிட்டு வா. இதற்குள் மாகதம் வந்தால் நீ வரும் வரை அவளை இங்கேயே நிறுத்தி வைத்துக் கொள்கிறேம்' என்று கூறினன். அதன்படியே ராட்சஸ குப்பனும் அக்குடிசையைவிட்டு வெளியே சென்ருன், அவன் போய்விட்ட பின்னர் கணவனும் மனைவியும் மட்டுமே இருந்ததால் பாலு தன் மனைவியிடம்,' பார்த்தாயா? குப்பன் பொய் சொல்லுகிருன். நேற்று அவனுக்கு இந்திராபாய் பணம் கொடுக்காமலிருப்பாளா? அவன் தன்னிடம் பெருந் தொகையை வைத்துக்கொண் டிருக்கிருன் என்பதில் ஆட்சேபமில்லை. ஆனல் நம்மிடம் மறைக்கிருன்' என்ருன். அதற்கு அவனது மனைவி, 'ஆம்: அவன் நம்மிடம் மறைப்பது வாஸ்தவம். அவனைச் சோதிப்பதற்காகத்தான் இந்திராபாயைப்பற்றி அவ்வளவு விசாரித்தேன், அவன் உண்மையில் நேற்று ஏமாற்றப்பட்டிருந்தால் அவனுக்கு அவளிடம் வெறுப்பல்லவோ இருக்கவேண்டும். அவன் அவளை வெறுக்கவில்லை என்பது நன்ருகத் தெரிகிறது. நாம் ஏதாவது பணம் கேட்போமென்று பயந்துகொண்டு தான் அவன் அவ்வாறு சூழ்ச்சி செய்கிருன். அவனுடைய சொக்காயில் உட்புறப் பை இருக்கிறது. அதில்தான் ரகசியமாகப் பணம் வைத்துக்கொண்டிருக்கிருன். நம்மிடம் சாப்பிடுவதும் இதர சௌகரியங்களை அனுபவிப்பதுமாய் இருந்தும் எப்போதோ ஒன்றிரண்டு அணுக்களைக் கொடுத்து நம்மை ஏமாற்றப் பார்க்கிருன்' என்ருள். இதையெல்லாம் கேட்ட பாலு, 'ஆம்! நீ சொன்னதெல்லாம் உண்மைதான். நீ அவனிடம் பேசும்போது ஏதோ வேடிக்கையாய்ப் பேசி

னுய் என்று நினைத்தேனே யொழிய இவ்வளவு காரணத்துடன் பேசுவதாக நான் கருதவே யில்லை. உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். என் மனதிலுள்ளதையே நீயும் சொல்லிவிட்டாய். இப்போது அவனை என்ன செய்யலாம்' என்று கேட்டான்.

அப்போது அவனது மனைவி 'இந்த குப்பனைப்போல் எவனுவது நம்மை ஏமாற்றுவானுயின் அவனை நான் என் கத்தியால் குத்தி எமனுலகம் அனுப்பிவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பேன். அப்பிரேதத்தைப் பக்கத்திலுள்ள கால்வாயில் போட்டுவிட்டால் போகிறது. நீயும் ஒரு புருஷனுக இருந்து இதைச் செய்வாயானுல் நான் என்னுல் முடிந்த துணையைப் புரிவேன்' என்றுள். அவனும், 'சரிதான் அப்படித்தான் செய்வோம். இந்த காரியத்தை எப்படி ஒழுங்காக முடிப்பதென்று தீர்மானித்து விடவேண்டும்' என்று சொல்லி முடிப்பதற்குள் அக்குடிசையில் யாரோ நுழையும் சப்தம் கேட்டதால் இருவரும் பேசாமல் மௌனமாக இருந்து வருவது யார் என்று எதிர்பார்த்தனர். மரகதம் உள்ளே நுழைந்தாள். அவள் ராட்சஸ குப்பன் எங்கே என்று விசாரித்தாள். அதற்கு அவன் உண்மையான பதில் சொல்லாமல், 'குப்பன் இன்று கூட எங்கேயோ வெளியில் போய்விட்டான். நீ என்ன சமாசாரம் கொண்டு வந்திருக்கிருய். அதை எங்களிடம் சொல்' என்று கேட்டான். குப்பன் இல்லையென்று தெரிந்ததும் ஆத்திரமடைந்த மரகதம், 'இதென்ன, இவன் இப்படி யெல்லாம் கண்ட இடத்தில் ஓடிக்கொண்டிருக்கிறுன். நான் அவனது விடுதலைக்காக என்ன கஷ்டப்பட்டும் என்ன பிரயோசனம்? அவன் வரும் வரை நான் காத்திருக்கவும் முடியாது. இனி இங்கு வர என்னுல் முடியவும் முடியாது. குப்பனிடம்

அவனுடைய விஷயம் சரிப்படுத்தப்பட்டு விட்டதென்றும், அவன் யார் வீட்டில் திருடினனே அந்தச் சீமாட்டி தன் சாமான்களெல்லாம் கிடைத்து விட்டதென்றும், ஆதலால் இது விஷயத்தில் போலீஸார் எந்த நடவடிக்கையையும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லையென்று போலீசுக்கு அறிவித்துவிட்டதாயும் சொல்லிவிடுங்கள். அவன் இனி சுதந்திரமாக இருக்கலாம்' என்று சொல்லி முடித்தாள்.

இதைக்கேட்ட பாலு 'ஓ, குப்பனுக்கும் சந்தோஷச் செய்திதான் கிடைத்திருக்கிறது; அவன் இந்த இரவு முழுதும் வரமாட்டான் எனத் தெரிகிறது. நான் அவனுக்காகத் தூங்காமல் விழித்திருப்பேன்' என்றதும் அவள், 'சரி! என்னல் இனி ஒரு நிமிஷமும் இங்கே இருக்க முடியாது. அவன் வந்தால் இதைச் சொல்லி விடுங்கள்,' என்று கூறிவிட்டு அங்கிருந்து போய்விட்டாள். அவள் போனதும் பாலு தன் மனைவியிடம் 'நான் சாமர்த்தியமாக வேலையை முடித்துவிட்டேனல்லவா? அவள் இங்கேயே இருந்திருந்தால் அவன் வந்ததும் இருவருமாகச் சேர்ந்து வெளியே போய்விட்டிருப்பார்கள். 'அப்போது நம் காரியத்தை எப்படி முடிப்பது? ஆதலால் அவள் இங்கு இருக்காதபடி அனுப்பிவிட்டேன்' என்றான். பிறகு இருவருமாக எப்படி ராட்சஸ குப்பனைக் கொன்று அவனிடமிருக்கும் பணத்தைக் கொள்ளையடிப்பது என்று யோசித்து ஒரு முடிவுக்கு வந்தனர்.

இதற்கிடையில் அக்குடிசையைவிட்டு வெளியேசென்ற மாகதம் கிளைப்பாதையைத் தாண்டியதும் எதிரில் ராட்சஸ குப்பன் வருவதைக் கண்டு ஆச்சர்யத்துடன், 'என்ன! நீ உன் ஏற்பாட்டை மாற்றிக்கொண்டு விட்டாயோ' என்று கேட்டாள். அவன் அவள் கேட்பதன் அர்த்தம் தெரிந்து கொள்ள முடியாமல் அவ்வாறு கேட்டதன் காரணமென்ன

என்று கேட்டான். அம்மாது, 'நீ இந்த இரவு முழுதும் வர மாட்டாய் என்று அவர்கள் சொன்னார்களே. அப்படியிருக்கும்போது நீ ஏன் இவ்வளவு சீக்கிரத்தில் திரும்பிவிட்டாய்? என்று கேட்டாள். அதற்குக் குப்பன், 'இல்லவே இல்லை இப்போதுதானே நான் குடிசையிலிருந்து நல்ல காற்றை வாங்குவதற்காக வெளியேவந்தேன்' என்றான். அவள், 'அப்படியிருக்க அவர்கள் ஏன் பொய்யைச் சொல்லவேண்டும். நீ இரவு முழுதும் வரமாட்டாய் என்று சொன்னதால் நான் உடனே திரும்பி வந்து விட்டதுடன் அவர்களிடம் சமாச்சாரத்தையும் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன்' என்றாள் உடனே ராட்சஸ குப்பன் மிக ஆர்வத்துடன், 'என்ன சமாச்சாரம் சொல்லியிருக்கிறாய்? நீ என் விஷயத்தைச் சரிப்படுத்தி விட்டாயா' என்று கேட்டதும மாகதம் பின் வருமாறு கூறினாள். 'நான் மிக்க சிரமத்தின்மீது விஷயத்தைச் சரிப்படுத்தி விட்டேன். ஹேமவதி சீமாட்டி போலீஸ்காரர்களிடம் இனி அவர்கள் தன் வீட்டில் களவுபோன விஷயத்தில் எத்தகைய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று கூறிவிட்டாள். யாரோ ஒருவர் தன்னிடம்வந்து, அவள் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாகாதென்னும் நிபந்தனையின் மீது திருட்டுப்போன சாமான்களை யெல்லாம் கொடுத்துவிட்டதாகவும், தனக்குச் சாமான்கள் கிடைத்து விட்டதால் போலீசார் இனி நடவடிக்கை எடுப்பது அவசியமில்லையென்றும் தெரிவித்துவிட்டதுடன் சில அதிகாரிகளுக்குக் கொஞ்சம் பணமும் கொடுத்து விட்டாள். நான் சிறிது நேரத்துக்கு முன்புதான் உன் கூட்டாளி ஜெயசிங்கைப் பார்த்தேன். அவனும் நேற்று இரவு உனக்கு நல்ல கிராக்கி கிடைத்ததாகச் சொன்னான். ஆதலால் நேற்று கிடைத்த சொத்து, ஹேமவதி சீமாட்டி வீட்டில் திருடியது, நான் சில தினங்களுக்குமுன் கொடுத்தது ஆகிய இவைகளை யெல்லாம்

சேர்த்தால் நீ ஒரு பெரிய பணக்காரனுய் விட்டிருப்பாயே! இவ்வளவு பணத்தையுடைய நீ இனிமேலாவது கொலே, களவு முதலிய வேலேகளுக்குப்போகாமல் ஏதேனும் கௌரவமான தொழிலைச் செய்து கொண்டு நிம்மதியான வாழ்க்கையையே நடத்தக் கூடாதா?' என்று பரிவுடன் கேட்டாள்.

ராட்சஸ குப்பனும் அவள் கூறியதின் உண்மையை உணர்ந்து, 'ஆம்; நானும் அப்படித்தான் நினைக்கிறேன். இந்தத் துப்பறியும் உத்தியோகஸ்தர்களுக்காகப் பயந்துகொண்டிருந்தேன். இனி அந்தக் கவலேயும் எனக்கு இல்லாதபடி நீ செய்துவிட்டாய். நான் இங்கேயே நமது நகருக்கு அடுத்துள்ள கிராமங்களில் சாப்பாட்டு விடுதி வைத்துக்கொள்ளலாமென்று இருக்கிறேன். அது கிடக்கட்டும். இந்தப் பாலுவும் அவனது மனேவியும் ஏன் இம்மாதிரி பொய்பேசினுர்கள் என்பது விளங்கவில்லே' என்றுன். அதற்கு மாகதம், 'ஆம்; அதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நீ அவர்கள் விஷயத்தில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதுதான்!' என்ருள். அப்போது அவன், 'அந்தப் பாலுவும் அவன் மனேவியும் கண்ணிய மானவர்களென்று நினேத்தேன். என்னிடம் பணம் இருக்கிறதென்பதை நான் அவர்களிடம் சொல்லவில்லே என்பது உண்மைதான். சொன்னுல் அவர்கள் சிறுகச் சிறுகக் கடன் கேட்க ஆரம்பித்துவிட்டால் என்ன செய்வது என்று அஞ்சினேன். அவர்கள் ஏதோ உதவி செய்து வருவதால் கடன்கேட்டால் கொடுக்காமல் இருக்கமுடியாது. கொடுத்த பிறகு அவர்களிடமிருந்து திரும்பப் பெறுவதும் கஷ்டம். ஆதலால் பணம் இருப்பதாகச் சொல்லவே யில்லே. அதற்காக அவர்கள் இப்படி நடந்து கொள்வதா; இதில் வேறு ஏதோ சூழ்ச்சி இருக்கவேண்டும் இருக்கட்டும். நான்போய்ப் பார்த்துக் கொள்கிறேன். நீ எனக்குச்செய்த உதவிக்காக உனக்கு

மிக வந்தனம்,' என்று கூறி மாகதத்தை அனுப்பிவிட்டு அவ்விடத்தினின்றும் புறப்பட்டான்.

ராட்சஸ குப்பன் அக் குடிசையில் தனக்காக ஒதுக்கப்பட்ட அறையில் மறைவான ஓரிடத்தில் தன் சொக்காயை வைத்திருந்தான். அந்த சொக்காயின் இரகசியப் பையில் தான் பெருந் தொகைக்கு நோட்டுகள் இருந்தன. ஆதலால் அவன் அக்குடிசைக்கு வரவேண்டியதாயிற்று. அதுமட்டுமா? உண்மையில் என்ன நடக்கப்போகிறதென்பதையும், அவர்கள் தன் விஷயத்தில் ஏதேனும் சூழ்ச்சி செய்தால் அவர்களைக் கொன்று விடுவதென்றும் தீர்மானித்தே அந்த இடத்துக்குத் திரும்பினான். கெட்டிக்கப்பட்ட தன் கைத் துப்பாக்கி தன் சட்டைப் பையில் இருப்பதையும் அறிந்து சந்தோஷப்பட்டான். அவன் அக் குடிசைக்குப் போனதும் அவர்களுடைய முகத்தில் எவ்வித மாறுதல் குறியும் இல்லாததைக் கண்டு எப்படியோ பார்ப்போமென்று இருந்தான். இதற்குள் பாலு குப்பனிடம், 'நல்லசமயத்தில் நீ வெளியே போய்விட்டாயே! இங்கேயே இருந்திருந்தால் அவளைப் பார்த்திருக்கலாம்' என்றதும் குப்பன் ஒன்று மறியாதவன் போல், 'யாரைப் பார்த்திருக்கலாம், மறுபடியும் இந்திராபாய் இங்கு வந்திருந்தாளா?' என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அவன், 'இல்லை. மாகதம் வந்திருந்தாள். உன் விஷயம் நல்ல முடிவுக்கு வந்திருப்பதாயும், நாளை மாலைக்குள் எல்லாம் தெரிந்துவிடு மாதலால் நாளை இரவு இங்கு வருவதாகவும், நீ இங்கேயே இருக்க வேண்டுமென்றும் சொல்லிப் போனாள்' என்றுகூறினான். அப்போது உண்மையை அறிந்து கொண்ட அவன் அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் மாகதத்தினிடம் அதிக கோப மடைந்தவனைப்போல், 'ஓஹோ! அவள் ஏதோ என்னை ஏமாற்றிக்கொண்டு வரு

கிறாள். இனியும் என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. அவள் எந்தப் பக்கமாகப்போனாள் என்பதைச் சொல்லுங்கள். பின்னாலேயே போய்க் கத்தியால் ஒரேவெட்டு வெட்டி விடுகிறேன்' என்று அதிக ஆத்திரத்துடன் கூறினான். அதைக் கேட்ட கணவனும் மனைவியும் அவன் உண்மையிலேயே கோபமடைந்திருக்கிறான் என நினைத்து அவனுக்குப் பலவிதத்திலும் சமாதானம்கூறிச் சாந்தமடையும்படி செய்ய முயன்றார்கள்.

பிறகு மூவருமாகச் சேர்ந்து பல விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். ராட்சஸ குப்பனும் அவர்களுடன் தமாஷாகப் பேசுவதுபோல் நடந்தானே யொழிய உண்மையில் பல விஷயங்களைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தான். கணவனும் மனைவியும் தன்னை ஏமாற்றுகிறார்கள் என்பதை அவன் நன்கு தெரிந்துகொண்ட படியால் தான் அவனுக்கு அவ்வளவு யோசனை உண்டாயிற்று. தன் சட்டையை அவர்கள் கண்டுபிடித்து அதிலுள்ள நோட்டுகளை அவர்கள் எடுத்துக்கொண்டு விடவில்லை என்பதை அவன் அவர்கள் அவனை அங்குத் தங்க வைக்க விரும்பியதிலிருந்தே தெரிந்து கொண்டான். அவன் தன்னிடமுள்ள கைத்துப்பாக்கியால் அவர்களிருவரையும் அவர்களது குழந்தையையும் சுட்டு வீழ்த்த நினைத்தானென்றாலும் வெடிச் சத்தம் வெளியில் கேட்டு அக்கம் பக்கத்தில் நடமாடுவோர் யாரேனும் உள்ளே வந்து தன்னைப் பிடித்துக்கொண்டு விட்டால் என்ன செய்வது என்று பயந்தான். அவர்கள் அவனைக் கொல்வது நிச்சயமென்று தெரிந்து கொண்டதால் தான் அவர்களைக் கொல்ல யோசித்தான். மேலும் அறையில் நுழையும்போதோ அல்லது குடிசையினின்றும்வெளியேறும் போதோ அவர்க ளிருவருமாக அவனைப் பின்னாலிருந்து

ஏதேனும் செய்து கொன்று விடுவார்கள். இவ்வாறு சிந்தித்து வெகு நேரம் வரை ஒன்றும் தோன்றாமல் கடைசியாக தனக்குள் எதையோ தீர்மானித்துக்கொண்டு அவர்களுடன் பேசுவதன்மத்தியில், 'இந்த இடம் மிக்க நெருக்கமாக இருப்பதால் ஒரே நாற்றமாக இருக்கிறது. உங்களுக்கெல்லாம் வாசனை பிடிக்காது போலும்!' என்று கேட்டான். அதற்கு அவர்கள் வாசனை பிடிக்குமென்றும், ஆனால் அவர்களுக்கு அந்த இடமே பழக்கமாய் விட்டதால் கஷ்டமொன்றும் தெரியவில்லை யென்றும் பாலு கூறினான். அப்போது அவனது மனைவி, 'ஏன்? யாரிடமாவது ஏதேனும் வாசனைப் பொருள் இருந்தால் ஆனந்தமாய் நானும் வாசனை பார்ப்பேன்' என்று குதூகலமாய்க் கூறினாள். அதுதான் தனக்கேற்ற சமயமென நினைத்த ராட்சஸ் குப்பன் தன் சட்டையின் உட்பையில் இருந்த சிறு புட்டியை யெடுத்து பாலுவின் மனைவியிடம் கைக்குட்டை இருந்தால் காண்பிக்கும்படி சொன்னான்.

அம்மாதும் மெய்யாகவே குப்பன் ஏதோ வாசனைப்பொருள் வைத்திருக்கிறானென நினைத்து தன் அழுக்குப்படிந்த கைக்குட்டையை நீட்டினாள். அவனும்! 'எனக்கு வாசனை அதிகசமீபத்தில் வரக்கூடாது. தூரத்திலிருந்து சிறிதுவாசனை அடித்தால் அதைத்தான் பொறுத்துக் கொள்ள முடியும் எனக் கூறிக் கொண்டே அவளது கைக்குட்டையில் தன் புட்டியிலிருந்த திராவகத்தை ஊற்றினான், ஊற்றிமுடிந்ததும் 'மாதே! உன் ஜென்மத்திலேயே இதுவரை இப்படிப்பட்ட வாசனையைப் பார்த்திருக்க மாட்டாய். இதை உன் மூக்கினருகில் வைத்து சுவாசித்துப் பார்' எனக் கூறினான். அவளும் வேடிக்கையாகச் சிரித்துக் கொண்டே கைக் குட்டையை மூக்கினருகில் வைத்ததும் ஏதோ இடியால் தாக்குண்டவள்

போல் மூர்ச்சையையாய்க் கீழே விழுந்தாள்; அவள் கையிலி ருந்த ஏழெட்டுமாதக் குழந்தையும் அவளடியில் விழுந்து சிக் கிக்கொண்டது. அதே சமயத்தில் ராட்சஸ குப்பன் தன்கை யிலிருந்த ஒரு பெருந்தடியால் பாலுவின் தலைமீது ஒரு அடி கொடுத்தான். ஆனால் தெய்வாதீனமாய் அது ராட்சஸ குப் பன் நினைத்தபடி படாமல் தப்பியதால் குப்பன் திக்பிரமை யடைந்தான். இதற்குள் பாலுவும் சமாளித்துக்கொண்டு அவன் மீது பாய்ந்தான். உடனே இருவருக்கும் பலத்தசண் டை நடந்தது. யார் யாரைக் கொல்வார்கள் என்று சொலல முடியாதபடி இவன்மீது அவனும் அவன்மீது இவனுமாகப் போராடினார்கள். ஒருவருக்கொருவர் இளைத்தவரல்ல என்று தோன்றும்படி இருவரும் பரஸ்பரம் தங்கள் பலத்தை காண் பித்தனர். கடைசியில் பாலு இறந்து போகவேண்டிய வேளை வந்து விட்டதால் அவன் அடியில் அகப்பட்டுக் கொள்ள ராட்சஸ குப்பன் மேலே இருந்ததால் தன் தடியால் ஓங்கி ஒரு அடி கொடுத்தான். அதனால் பாலுவின் மண்டைபிளந்து அவன் எமனுலகம் ஏகினான்.

பாலுவின் மனைவி ஸ்மரணை யற்றுக் கிடக்கின்றாள். அவளை அப்படியே விட்டு விட்டுப் போய்விடுவதா என்று யோசித்தான். ஆனால் அவள் ஸ்மரணை பெற்ற பின்னர் தன் கணவனைக் கொன்றவன் குப்பனே யென்று சொல்லி விடுவா ளல்லவா; ஆதலின் அவளையும் கொன்றுவிட வேண்டியது தான் என்று தீர்மானித்தான். ஆகவே தன் கையிலிருந்த பெ ரிய கத்தியால் அவள் மார்பில் குத்திக் கொன்றான். அவளும் ஒரு சத்தமுமில்லாமல் தன் கணவன் சென்ற இடம் போய்ச் சேர்ந்தாள். இவ்வாறு அவன் அவர்களைக் கொன்று அவர் கள் அங்குப் பிணமாகக் கிடப்பதையும் அந்த இடம் பூராவும்

இரத்தமயமாய் விளங்குவதையும் பார்த்தும் அவன் கருங்கல் போன்ற மனம் சிறிதும் இளகவேயில்லை. அங்கிருந்த தண்ணீரால் தன் தடியையும் கத்தியையும் சுத்தப்படுத்தியதுடன் தன்தேகத்தில்பட்ட இரத்தக்கறையையும் துடைத்துக்கொண்டான். பிறகு அவன் அறையில் சென்று மறைவான இடத்திலிருந்த தன் சட்டையை எடுத்துக் கொண்டு அவ்விடத்தினின்றும் புறப்படத் தயாரானன். அச்சமயத்தில் அவனுக்கு வாசனைப் பொருள் போன்ற திராவகம் அடங்கிய சிறுபுட்டியின் ஞாபகம் வந்தது. அவன் அதை ஒரு மேஜையின் மீது வைத்திருந்தான். அம்மேஜை சண்டையில்கீழேவிழுந்து விட்டிருந்தபடியால் அதன் மீது இருந்த புட்டியும் கீழே விழுந்து கிடந்தது. ஆயினும் அது உடைந்து போகாமலிருந்ததால் அவன் சந்தோஷத்துடன் அதை எடுத்துக் கொண்டு பத்திரப்படுத்திக் கொண்டான். அந்தப் புட்டி அவனுக்கு அதிக உபயோகமாக இருப்பதால் அவன் அதை விடுவானு?

பின்னர் அவன் கோரமான அந்த இடத்தை விட்டுச் சிறிதும் கவலையின்றிப் போய்விட்டான். ஆ! என்ன கொடிய ஹிருதயம்! சிறிதும் இரக்கமில்லாமல் ஒரு குடும்பத்தையே எமனுலகுக்கு அனுப்பிவிட்டான். கொலையும் களவுமே தொழிலாக உடையவர்களுக்கு இரக்கமென்பது எங்கிருந்து வரப்போகிறது. அற்பர்கள் இருவர்சேர்ந்தால் இருவருக்குமே ஆபத்து ஏற்படுமென்பது உண்மை. பாலுவும் அவனது மனைவியும் குப்பனின் பணத்தைக் கொள்ளை யடிப்பதற்காக அவனைக்கொல்ல யோசித்தார்கள். கெடுவான் கேடு நினைப்பான் என்பது இதனுல் விளங்குகிற தல்லவா?

---

## 45-வது அத்தியாயம்

### பல புருஷரை யுடைய மாது

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட அகோரமான கொலை நடந்த அதே இரவு சுமார் பத்தரை மணிக்கு சந்திரசேகரம் பிரபு, தனி ரஸ்தாவில் அமைக்கப்பட் டிருந்த நாடகக்கணிகை கமல குமாரியின் மாளிகையை அடைந்தான். அம்மாளிகை முன்னர் தான் அம்மாதினுடன் சம்பந்தம் வைத்துக்கொண்டிருந்த போது இருந்ததைவிட மிக அழகாகவும் விலையுயர்ந்த சாமான்களாலும் விசித்திர வேலைப் பாடுகளுடனும் காணப் பட்டது. அவ்வளவும் காமாதுரனை தினகரம் பிரபுவின் பணத்தால் ஏற்பட்டவையே. அவன் அவளிடம் கொண்டிருந்த மோகத்தால் அவள் கேட்டதை யெல்லாம் அவன் கொடுத்து வந்ததால் இவ்வளவு சௌகரியங்களையும் பெற அவளால் முடிந்தது. தினகரம் பிரபுவும் கமல குமாரியும் கூடிச் சொற்ப தினங்களே ஆயிற்று என்றாலும் பணம் மட்டும் அதிகமாகவே செலவாகிவிட்டது. தினகரம்பிரபு நினைத்த போதெல்லாம் கடன் வாங்க கமல குமாரியே ஒரு மார்வாடியிடம் சிபார்சு செய்திருந்தாள். அவர் அதிகவட்டிக்குக்கடன் கொடுத்து வந்தார். அவள் பற்பல காரணங்களுக்காகவே நாடகமேடையில் நடித்து வந்தாள். அவள் கூடியவரையில் நன்றாக நடித்ததால் அனைவரும் புகழ்வார்க ளாதலால் அந்தப் புகழ்ச்சியைப் பெற வேண்டுமென்பது ஒரு காரணம். இந்த தினகரம் பிரபுவின் சம்பந்தம் எந்த நிமிஷத்திலும் அற்றுப் போகலா மாதலால் நாடக மேடையில் இருந்தால் தான் மற்றும் பலருடைய சினேகத்தைப் பெறச் சாத்திய மாகும் என்பது இரண்டாவது காரணம். தன்னுடன் நடிக்கும்

இதர பெண்களைவிடத் தன் அந்தஸ்து சிறிது உயர்வாகவே இருந்ததால் அதைப்பற்றிப் பெருமையாகச் சொல்லிக் கொள்ளச் சந்தர்ப்பம் ஏற்படுகிற தென்பது மூன்றுவது காரணம். இவ்வாருக அவள் பல காரணங்களைக் கொண்டே நாடகமேடை சம்பந்தத்தை விட்டு விடாம லிருந்தாள்.

அவளுடைய மாளிகையை அன்று இரவு அடைந்த சந்திரசேகரன் கதவைத் தட்டியதும் அதைத்திறந்த சேவக னிடம் தினகரம் பிரபு உள்ளே இருக்கிருரு என்று விசாரித் தான். சேவகன் பதில் சொல்வதற்குள் தினகரம் பிரபுவே அவன் எதிரில்வந்து நின்று, 'குரலைத்தெரிந்து கொண்டுதான் உடனே ஓடிவந்தான். உள்ளேவா நீ இங்கு வந்திருப்பதைக் காண எனக்கு மிகச் சந்தோஷமாக இருக்கிறது! என்றுன். சந்திர சேகரனும் உள்ளே போனுன். அங்கு ஒரு அறை யில் மேஜையின் மீது பல வித போஜன பதார்த்தங்கள் வைக்கப்பட்டிருந்தன. கமல குமாரி ஒரு மெல்லிய பட்டா டையை அணிந்து கொண்டு ஒரு சோபாவில் சாய்ந்திருந் தாள். அவளைக் காண்போர் அவள் நிர்வாணமாக இருக்கிரு ளோ என்று சந்தேகிக்கும்படி அவ்வளவு துல்லியமாக அந்த உடை இருந்தது. அவளது பின்னப்பட்ட நீண்டகரிய கூந் தல் அவள் தோள்மீது விழுந்து ஊஞ்சலாடிக்கொண்டிருந் தது. அவளைக் காணும் எந்தச் சபல புத்தியுடைய ஆடவனும் சிறிது நேரமாவது அவளைப் பெறவேண்டு மென்னும் விருப் பத்தை யடையாம லிரான்.

அவள் சந்திர சேகரம் பிரபுவைக் கண்டதும்! அவனுடன் அவளுக்கு முன்னமே சம்பந்தமிருந்தபடியால் தைரியமாக வும் சந்தோஷத்துடனும், 'பிரபுவே! உன்னை இங்குக் காண மிகவும் சந்தோஷ மடைகிறேன். ஆனுல் நீ துப்பாக்கிச் சண்

டை போட்டாயே! அது ஆபாசமல்லவா? உன்னைக் காணும் போதே பயங்கரமாக இருக்கிறது!' என்று பரிகாசம் செய்தாள். அதற்கு அவன் ஏதோ சமாதானம் கூறிய பின்னர் மூவருமாகச் சிறிது நேரம் வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருந்தனர். அந்தப் பேச்சிலும் அவள் தன்னிடம் தினகரனுக்கு மோகம் அதிகரிக்கும்படியான சந்தர்ப்பத்தையே ஏற்படுத்திக் கொண்டாள். இறுதியாக தினகரம் பிரபு தன் நண்பனை நோக்கி! 'மோகனதாஸுக்கு எப்படி இருக்கிறது, அவன் வைத்தியசாலையில் குணப்பட்டு வருகிறான் என்று கேள்விப் பட்டேனே—உண்மை சமாசாரம் என்ன? என்று கேட்டான். அதற்கு சந்திரசேகரம் பிரபு,. 'எனக் கொன்றும் தெரியாது. உனக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் எனக்கும் தெரியும். எப்படியாவது அவன் குணமடைந்து விட்டால் எனக்கும் சந்தோஷமே. அதுவரை என்னை எந்த நிமிஷத்திலும் கைது செய்து விடுவார்களாதலால் நான் மறைவாகவே இருக்கவேண்டியிருக்கிறது. அது இருக்கட்டும். இப்போது நான் உன்னுடன் ஒரு முக்கிய விஷயம் பேசுவதற்காகவே இங்கு வந்திருக்கிறேன்' என்றான்.

அப்போது தினகரம் பிரபு, 'நீ பேசப்போவது ஏதேனும் இரகசிய விஷயமா?' என்று கேட்டுக்கொண்டே கமலகுமாரியின் முகத்தை நோக்கினான். தான் அந்தப் பேச்சைக் கேட்பதற்காகத் தனியே போனால் அவளுக்குக் கோபம் வந்துவிடுமோ என்று பயந்தான். இதற்குள் சந்திரசேகரன், 'அன்று நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டுக் கிபகப்பிரவேச விருந்தில் முகமூடியணிந்து வந்த பாஞ்சால நாட்டு ராஜகுமாரியைப்பற்றிப் பேசப்போகிறேன். அது ரகசியமா அல்லவா என்பதை நீயே முடிவு செய்துகொள்,' என்றான்.

அப்போது தினகரன், 'ஓ அம்மா! அதைப்பற்றியா? இதி லென்ன இரகசிய மிருக்கப்போகிறது, மேலும் அது எப் படிப்பட்ட இரகசியமாயினும் அதை என் கண்மணி கமல குமாரிக்குச் சொல்லாம லிருக்க என் மனம் துணியாது' என்று சொல்லி முடிப்பதற்குள் அங்காடகக்கணிகையும், 'இதைப்பற்றி அவர் முன்னமே என்னிடம் சொல்லி யிருக் கிறார். ஆதலால் பூரா விவரத்தையும் நான் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். சந்திரசேகரம் பிரபுவே! விவரமாக என்ன நடந்தது என்பதைச் சொல்லும். இது ஒரு ருசிகர மான விஷயமாகத்தானிருக்கும் என்பதை நான் அறிவேன். அம்மாது யார்? என்று ஆவலுடன் பல விஷயங்களைப்பற்றிக் கேட்டாள். சந்திரசேகரன் சிறிது நேரம் யோசனை செய்து விட்டு, 'சரி, எல்லாவற்றையும் சொல்லுகிறேன். ஆனால் தினகரம் பிரபு! நான் எப்படிப்பட்ட விஷயத்தைச் சொன்னாலும் அதனால் நீ கோபமோ அல்லது திக்பிர மையோ அடையக் கூடாது. அதாவது நடந்த விஷயத்தை உண்மையாகவும் தாராளமாகவும் கூற அனுமதி கொடுப் பாயா?' என்று கேட்டான். அப்போது தினகரன், 'நண்பா! அந்த விஷயம் என் சகோதரிகளைப்பற்றியதாகவோ அல்லது என் தாயைப் பற்றியதாகவோ இருந்தாலும் அதையும் விவரமாகக்கேட்க ஆவலாக இருக்கிறேன். மேலும் அன்று பாஞ்சால ராஜகுமாரியின் வேடத்தை யணிந்துகொண்டு வந்த மாதின் உயரத்தையும் உருவத்தையும் கவனிக்கும் போது அது என் தாயாராகவும் இருக்கலாம் என்று இப் போது தோன்றுகிறது' என்றான்.

உடனே சந்திரசேகரன், 'ஆம். உன் தாயார்தான்' என்று கூறி முடித்ததும் கமலகுமாரி, 'இதுவும் ஒரு சந்

தோஷிக்கத் தக்க செய்திதான். தினகரம் பிரபுவே! அன்று என்னுடன் நீ பேசிக்கொண்டிருந்தபோது உன் தாயாரை அடக்குவதற்குரிய சக்தி உனக்கு ஏதேனும் கிடைத்தால் நன்ருயிருக்கும் என்று சொன்னுயல்லவா? இச் செய்தியைக் கொண்டு இனி நீ அவளை மிரட்டலாம்' என்று கூறிச் சந்தோஷமடைந்தாள். தினகரனும், 'ஆம், இது ஒரு வேடிக்கையான சமாசாரம்தான். என் தாயாரை நான் மிரட்டக்கூடிய ஏதேனும் அவளைப்பற்றிய இரகசியம் எனக்குத் தெரியவேண்டுமென்று நான் ஆவலுடன் இருந்ததால் நண்பா! இப்போது நீ சொன்ன விஷயத்தால் கோப முண்டாகாமல் சந்தோஷத்தையே உண்டாக்கி இருக்கிருய்' என்று கூறினுன். அப்போது சந்திரசேகரம் பிரபு, 'இந்த விஷயத்தில் இன்னும் சில சிக்கல்கள் இருக்கிறது விருந்தில் வேஷத்துடன் தோன்றிய மாது ஹேமவதி சீமாட்டியே என்பதற்கு ஒன்றும் சந்தேகமில்லை. அதை நான் நிச்சயமாகத் தெரிந்துகொண் டிருக்கிறேன். ஆனுல் அதை ருஜுப் படுத்தத் தக்க அத்தாட்சி யொன்றும் கிடைக்காமல் அவஸ்தைப் படுகிறேன். இப்போது உன் உதவி அவசியமாக இருக்கிறது. அதாவது அவள் அன்று பாஞ்சால ராஜ குமாரியைப்போல் அணிந்து வந்த ஆடைகளெல்லாம் அவளது பிரத்யேக பெட்டியில் இருக்கும். நீ எப்படியாவது அதைச் சோதனைபோட்டு அந்த உடையைக் கொண்டு வந்து விட்டால் பிறகு அவள் உண்மையை மறுக்க முடி முடியாது. இதனுல் நீ உன் தாயை அடக்கி ஆள முடியுமாதலால் சிரமத்தைப் பாராமல் அதை எடுத்துக்கொண்டு வருவாய் என்று நம்புகிறேன்' எனக் கூறினுன்.

அதைக் கேட்ட தினகரனும், 'சரி, அப்படியே ஆகட்டும். நான் அவருடைய பெட்டிகளில் ஒன்றையும் விடா

மல் தேடி எப்படியாவது அழைத்துக்கொண்டு வந்து விடுகி றேன்' என்று கூறியதும் கமல குமாரியும், 'ஆம்; அப்படித் தான் செய்யவேண்டும். எப்படியாவது நீ உன் தாயை உன் கைக்குள் கொண்டுவரா விட்டால் அவள் எந்த நிமிஷத்திலும் நம்மைப் பிரித்து விடுவாள் என்னும் பயம் அதிகமாக இருக்கிறது. ஆகவே நீ அவள் இரகசியத்தைக் கண்டு பிடிக்க வேண்டியது அவசியம் தான்' என்று கூறினள். அப்போது தினகரன், 'ஆம்; என் னுல் இயன்றதைச் செய்வதாகச் சொல்லியிருக்கிறேனே, நான் நாளைய காலேயே என் வீட்டுக்குச் சென்று அவள் பெட்டிகளை யெல்லாம் சோதனை போட்டு அந்த உடையைக் கொண்டுவந்து விடுகிறேன். ஆனல் சந்திரசேகரா! என்ன காரணத்தால் என் தாயார் உன்னை அந்த விருந்தில் அவ்வாறு சந்தித்தாள்?' என்று கேட்டான். அதற்கு அவன் அப்போது ஒன்றும் கூற முடியாதென்றும் எல்லாம் ருஜுவான பிறகு தான் சொல்ல முடியுமென்றும் சொல்லி விட்டான். பிறகு தினகரனும் கமல குமாரியுமாகச் சேர்ந்து சந்திர சேகரனை அங்கேயே இரண்டொரு நாட்கள் இருந்து போகும்படி கேட்டுக் கொண்டனர். அவன் முதலில் இஷ்டமில்லாதவனைப்போல்பாவனைசெய்து பிறகு அங்கிருக்க ஒப்புக்கொண் டான். மூவருமாக விருந்து சாப்பிட்டார்கள். சந்திர சேகர னுக்கென ஒரு அறை காண்பிக்கப்பட்டது. அன்று இரவு அவ்வாருகக் காலங் கழிந்து விட்டது.

மறுநாள் காலை பத்துமணிக் கெல்லாம் பலவிதமான பதார்த்தங்களுடன் கூடிய ஆகாரத்தை அருந்திவிட்டுத் தின கரம்பிரபு தன் வீட்டுக்குப் புறப்பட்டான். அவன் வெளியே சென்றதும் சந்திர சேகரனும் கமல குமாரியுமட்டும் தனியே இருந்தார்கள். அவன் இருந்தபோது அவர்களிருவரும் மரி

யாதையுடன் நடந்து கொண்டனர். ஆனால் அவன் சென்றதும் இருவரும் கள்ளக் காதலர்களாக மாறினர். சந்திர சேகரன் முன்னமே அவளுடன் சம்பந்தம் வைத்திருந்த படியால் இப்போது தாராளமாக அவளைத் தன் இஷ்டப்படி அனுபவிக்க ஆரம்பித்தான். தினகரம் பிரபு அவளிடம் எப்படி நடந்துகொள்கிறான் என்று விசாரித்து அறிந்து கொண்டான். தினகரன் வருவதற்குள் பலமணி நேரம்வரை அவர்களிருவரும் இஷ்டப்படி குலாவலா மாதலால் சந்திர சேகரன் அவளைப் பார்த்து, 'கண்மணி! இரண்டு வருஷங்களுக்குமுன் நான் உன்னிடம் சம்பந்தம் வைத்துக் கொண்டிருந்தபோது இருந்ததைவிட இப்போது நீ மிக அழகாகவும், அதிக செல்வத்துடனும் காணப்படுகிறாய், இந்த இரண்டு வருஷ காலத்துக்குள் நீ எவ்வளவு ஆடவர்களின் தொடர்பைப் பெற்றாய் என்பதை விவரமாகக்கூறு பார்க்கலாம்' என்று கேட்டான். அவளும் ஒன்றும் விடாமல் அதைக் கூற இஷ்டப் படுபவள் போல் ஒவ்வொருவருடனும் அவள் வைத்திருந்த சம்பந்தத்தைப்பற்றி எல்லாம் கூற ஆரம்பித்துப் பின் வருமாறு கூறினாள்.

முதலாவதாக அந்த தர்மலிங்கம் பிரபு என் மோகத்தில் சிக்கிக்கொண்டான். அவன் தாராளமாக எனக்கு வேண்டிய பணத்தை யெல்லாம் கொடுத்து வந்தான் என்றாலும் அவன் மிக வயதானவனாய் இருந்தான். இயற்கையாக இல்லாமல் எல்லாம் செயற்கையாகவேயே அவன் தன்னை அலங்காரப் படுத்திக்கொண்டு வந்ததால் அவனுடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருக்க என் மனம் இணங்கவில்லை, ஆதலால் அவனை நான் துரத்திவிட்டேன். பிறகு மதப் பிரசங்கியான தியாக ராஜ ஞானியார் என்னிடம் மோகங்கொண்டு என் இஷ்டப் படியெல்லாம் நடந்து கொண்டான். அவன் சுமாராகப்

TL 1122 M

பணம் கொடுத்தானென்றாலும் தர்மலிங்கம் பிரபுவைப்போல் அவ்வளவு பணம் கொடுக்க அவனால் முடியவில்லை. அவன் வேதாந்தமாக மதப்பிரசங்கம் செய்வதில் வல்லவன். அவனுடைய மனைவி அழகானவளாய் இருந்தும் அவன் அவளை லட்சியம் செய்யாமல் இருந்தான். என்னை அவனது பிரசங்கம் கேட்க அடிக்கடி வரும்படி சொல்வான். நானும் சிற்சில சமயங்களில் போய் வந்தேன். ஆனால் அவன் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாய் இருந்ததால் நான் பிரசங்கத்துக்குப் போக விரும்பவில்லை. அவன் என்னை வரும்படி கட்டாயப் படுத்தியதால் நாங்கள் இருவரும் சண்டை போட்டுக்கொண்டு பிரிந்துவிட்டோம். பிறகு நமது ராஜாங்க சபையில் உதயபுரியின் சார்பாக மெம்பராக இருக்கும் மாணிக்கவாசகம் பிரபுவின் பாதுகாப்பில் போனேன். அவன் நமது நகரில் பிரபலமான ஓட்டலில் தங்கியிருந்ததுடன் பல வேலைக்காரர்களையும் வைத்துக்கொண்டிருந்ததால் அவன் பெரியபணக்காரனாயிருக்கலாமென்று நினைத்து எனக்கு ஏற்றவன் அவனே என மதித்து அவனது இஷ்டப்படியே அவனைக் காதலனாக ஏற்றுக் கொண்டேன். ஆனால் உண்மையைக் கூற வேண்டுமாயின் இவ்விஷயத்தில் நான் முழுதும் ஏமாற்றமடைந்தேன். நான் கஷ்டப்பட்டுச் சேர்த்து வைத்த பணத்தையெல்லாம் கடன் வாங்கிக் கொண்டதுடன் என் நகைகளையும் அடகு வைத்து விட்டான். எப்போது பார்த்தாலும் தன் சொந்த ஊரிலிருந்து நிறைய பணம் வருமென்று எதிர் பார்ப்பவன் போல் பாசாங்கு செய்தான். ஒரு நாளாவது ஒரு பைசாவும் வரவில்லை. எனினும் அவன் எப்போதும் வேடிக்கையாகவும், சந்தோஷமாகவும், சாமர்த்தியமாகவும் பேசியும் நடந்தும் என்னை மயக்கி விட்டான். நானும் ஏமாந்து என்னுடைய சொத்துக்களையெல்லாம் கொடுத்து விட்டேன். எனினும்

186575
சென்னை-600 008

நாம் இருவரும் இவ்வாறு வாழ்ந்து வரும்போது அவன் உதயபுரி சம்பந்தமாய்ச் சரியாக ராஜாங்க சபையில் பேசாமல் போனதால் மறுமுறை தேர்தலில் அவன் வர முடியாமற் போயிற்று. அவன் சபைக்குப் போகும்போதெல்லாம் அளவுக்குமேல் குடித்துவிட்டுப் போவானாதலால் ஒன்றுக்கொன்று தடுமாறிப் பேசிவிட்டான். ஆகவே அவன் பிறகு இருக்கிற இடமே தெரியாமல் போய்விட்டது. நானும் என் சொத்துக்களை ஏமாந்தேன்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த சந்திரசேகரம் பிரபு சிரித்தான். பிறகு அவள் அப்பிரபுவின் கையைப் பிடித்துக்கொண்ட வண்ணம் மேலும் கூறியதாவது:— இவ்வாறு நான் மாணிக்கவாசகம் பிரபுவை இழந்த பின்னர் நீதிபதி பராங்குசத்தின் நட்பைப் பெற்றேன். அவர் என்னை இதே நகரத்தின் மற்றோரிடத்தில் வைத்திருந்தார். அவர் பிரபலராய் இருந்தபடியால் என்னை அவர் வைத்துக்கொண்டிருப்பது யாருக்கும் தெரியலாகாதென்னும் எண்ணத்துடன் மிக ஜாக்கிரதையாக என் வீட்டுக்கு வந்து போவார். அவர் தாராளமாக எனக்கு உதவி செய்தபடியாலும், என்னிடத்தில் அதிக ஆசையுடன் இருந்ததாலும் நான் முன்னர் இழந்து போன நகைகளையும் சொத்துக்களையும் பெற்றேன். அவர் நீதிபதி என்னும் ஹோதாவில் நியாயமாகத் தீர்ப்புசெய்து எதிரிகளுக்கும் நல்ல விதமான பிரசங்கம் செய்யக் கூடியவர். அவர் அப்படியிருந்தது தான் எனக்குக் கடைசியில் ஆபத்தாக வந்து முடிந்தது. நான் ஒரு பெண்ணை வேலைக்கு வைத்துக்கொண்டேன். ஒரு நாள் மாலை அவர் அப்பெண்ணைப் பார்த்து விட்டார். அவள் ஒரு முறை ஒரு ஆடவனுடைய துர்ப் போதனையால் கெட்டு கோர்ட்டுக்கு வர நேரிட்டபோது நீதிபதி அவள்

[library stamp]

ஒழுக்கத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென்று போதித்து அவனை விடுதலை செய்திருந்தாராம். அவனைக் காணவே அவருக்கு அவமானம் நேரிட்டுவிட்ட படியால் மறுநாள் அவர் நூறு பவுன் நோட்டு ஒன்றை எனக்குக் கடைசி சன்மானமாக அனுப்பிவிட்டு அத்துடன் வருவதே நின்று விட்டார். அவருக்குப் பின்னர் இந்த நாடகக் கம்பெனி மானேஜரை வைத்துக்கொண்டேன். அவன்போய் இப்போது உன் நண்பன் தினகரம் பிரபு வந்திருக்கிறன்.

இதைக்கேட்ட சந்திரசேகரம் பிரபு 'எனது அன்புள்ள மாதே! நான் உன் விஷயத்தில் உண்மையிலேயே அன்புள்ளவனுதலால் ஒரு விஷயத்தைக் கேட்கிறேன். அதாவது நீ ஏதாவது பணம் சேர்த்து வைத்திருக்கிருயா?!' என்று வினவினன், அதற்கு அவள், 'ஆஹா! அதுதான் முடியாத காரியம். இப்போது தான் கொஞ்சம் சேர்த்து வருகிறேன். ஆயினும் என் போன்றவர்களுக்குப் பணம் சேருமென்று நினைக்கவே முடியாது. பணக்காரர்கள் எங்களிடம் அகப்பட்டுக் கொள்ளும்போது ஏதேனும் சேர்ப்போம். ஆனல் அவர்கள் ஸ்திரமா? அவர்கள் போய் நாங்கள் யாரேனும் சிலரிடம் மோகத்தில் சிக்கி அவர்கள் ஏழைகளாய் இருந்து விட்டால் எங்கள் பாடு திண்டாட்டம்தான். எங்கள் பணம் அவர்களுக்காகச் செலவாய் விடும். ஆகவே என் போன்றவர்களுக்குச் சொத்தோ சுதந்தரமோ சேருமென்பது அசாத்தியம் தான். சிற்சில சமயங்களில் இந்த நினைப்பு எனக்குத் தோன்றி துக்கத்தை உண்டாக்குகிறது. எவ்வளவோ சௌகரியங்கள் இருக்கிறதே ஏன் பணத்தைச் சேர்த்து வைக்கக் கூடாது என்று கேட்கலாம். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதமான மிதமிஞ்சிய செலவில் ஈடுபட்டிருக்கலாம். அதுபோல் நானும் எனக்குத் தெரியாமல்

ஒரு வழக்கத்தில் ஈடுபட் டிருக்கிறேன். அதினின்றும் தப்ப முடியாது. எனினும் இப்பால் சொற்பம் சேர்த்து வருகிறேன்' என்றுள். அப்போது அவன், நான் இவ்வா றெல்லாம் கேட்பதால் உன் சொத்து எவ்வளவு என்று தெரிந்துகொண்டு அதை என் பிரயோசனத்துக்கு பயன் படுத்திக் கொள்ளப் பார்ப்பதாக நினைக்க வேண்டாம். உண்மையை ஒளிக்காமல் விவரம் சொன்னதற்காக உனக்கு வந்தனம்' என்று கூறிக்கொண்டே அவளை அணைத்துக் கொண்டு ஒரு முத்த மிட்டான். கமல குமாரியும், 'இப்படிப் பட்ட சம்பாஷணையைப் பேசியதால் என் மனம் ஒருவாறு உற்சாகமற் றிருக்கிறது. இம் மாளிகையின் பின்னுளுள்ள நந்தவனத்தில் சிறிது நேரம் உலாவி நல்ல காற்று வாங்க லாம் வா' என்று கூப்பிட்டு விட்டு அவனைத் தோட்டத்தில் அழைத்துச் சென்று அங்கு அவனுடன் உல்லாசமாகக் காலங்கழித்தாள்.

பல புருஷர்களை அனுபவித்த இந்தக் கமல குமாரியின் வரலாறும் நமக்குப் பலவித பாடங்களைப் போதிக்கின்றன. முதலாவது கமல குமாரி எவ்வளவுதான் கற்பை இழந்த வளாக இருந்த போதிலும் தர்மலிங்கம் பிரபு பணக்காரனு யிருந்தும் அவன் வயோதிகத்தை யடைந்திருந்தபடியால் அவனை வெறுத்துத் தள்ளிவிட்டாள். ஆதலின் இளங் குமரிகள் வயோதிகர்களை பணத்துக்காக வைத்துக்கொண் டாலும் அவர்களை உண்மையில் வெறுக்கவேசெய்வர். இரண்டாவதாகச் சொல்வதொன்றும் செய்வதொன்று மாய் இருக்கிறவர்களையும் சொந்த மனைவியை வஞ்சிக்கிற வர்களையும் இதர மாதர்கள் முதலில் சொற்பகாலம் நேசித்தா லும் பிறகு வெறுத்து விடுவார்கள். கமல குமாரி மதப்பிர சாரகராகிய ஞானியாருடன் சண்டை போட்டுக்கொண்டதி

விருந்தே இவ்வுண்மை விளங்குகிறது. மூன்றாவதாக மாணிக்கவாசகம் பிரபுவைப் போன்ற போக்கிரிகள் படாடோபமாக வாழ்க்கையை நடத்திச் சொத்துள்ள பெண்களை ஏமாற்றிப் பிறகு நட்டாற்றில் விட்டு விடுவர் என்பது தெரிவதால் பெண்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். இறுதியில் கமலகுமாரி சொன்னது போல் அப்படிப்பட்ட துன்மார்க்க வாழ்க்கையை நடத்துகிறவர்கள் சில துஷ்டர்களால் ஏமாற நேரிடுமாதலாலும், பல கெட்ட வழக்கங்களுக்குட்பட்டுப் பணத்தை இழக்க நேரிடுவதாலும், மன நிம்மதி இராதாதலாலும் ஏழையேயாயினும் ஆயுள் உள்ள அளவும் வைத்துக்கொண்டு அன்புடன் காப்பாற்றுகிறவரை மதத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் சாஸ்திர முறைப்படியோ,மற்றவர்கள் சட்ட சம்மதமான முறையிலோ விவாகம் செய்துகொண்டு வாழ்வதே எல்லா விதத்துக்கும் நன்மை தருவதாகும்.

---

## 46-வது அத்தியாயம்

### சீமாட்டியின் அறையில் சோதனை

கமல குமாரியின் மாளிகையில் மேலே கூறியவாறு பேச்சு நடந்து கொண்டிருந்தபோது இரத்தினபுரி நகரமெங்கும் அதற்கு முன் நாள் இரவு நடுக்குப்பத்துக் கருகில் பள்ளத் தாக்கிலுள்ள குடிசையில் நடைபெற்ற கோரக் கொலையைப் பற்றிய பேச்சாகவே இருந்தது. கணவன், மனைவி, குழந்தை ஆகிய மூவரும் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதை யறிந்தால் ஜனங்கள் திடுக்கிடாமல் வேறு என்ன செய்வர்? ஆனால் அக்கொலையை யார் செய்திருப்

பார் என்பது பற்றி எப்படிப்பட்ட பேச்சும் காணோம். யாருடைய பெயரும் அடிபடவில்லை. தினகரம் பிரபு வீட்டை யடைவதற்கு முன் வழியில் கேள்விப்பட்ட சமாசாரம் இது. அவன் வீட்டை யடைந்ததும் கோகத் தன் தாயார் இருந்த அறைக்குச் சென்றான். ஹேமவதி சிமாட்டி கையில் ஏதோ புஸ்தகத்துடன் இருந் தாளே தவிர அவளது மனம் புஸ்தகத்தில் சென்றிருக்கவில்லை. பலவிதமான சிந்தனைகள் அவளது மனதில் தோன்றி அவளை வருத்திக் கொண்டிருந்தன. ஆதலால் அச் சமயத்தில் தின கரன் இங்கு வந்தது அவளுக்குப் பிடிக்காமல் இருந்தபடி யால் அவள் அவனை வரவேற்காமல் மௌனமாக இருந்து விட்டாள். அவனும் அவள் அப்படியிருப்பதும் தனக்குச் சௌகரியமே என்று நினைத்து அவ்விடத்தை விட்டுப் புறப் பட்டான். அவனுடைய சகோதரிகளும் அவரவர்களுடைய அறையில் இருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு சந் தோஷத்துடன் தன் தாயின் உடைகள் இருக்கும் அறைக் குச் சென்றான். சாதாரண உடைகளைத்தான் பூட்டப் படாத பெட்டிகளில் வைத்திருப்பாளே யொழிய, அவன் தேடுவது போன்ற உடைகளை அவள் மறைவாகப் பூட்டிவைத்திருப்பா ளென்பது அவனுக்குத் தெரியும். ஆயினும் தன்னிட மிருக் கும் சாவிக் கொத்திலுள்ள சாவிகளைக் கொண்டே சமாளித்து விடலாமென்னும் தைரியத்துடன் போனான். ஆனால் ஒரு சாவியாவது ஒன்றிரண்டு பெட்டிகளுக்குச் சரிப்படவில்லை. ஆகவே அவன் தாயாருடைய சாவிக் கொத்தை எப்படியா வது திருடிக்கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டது. கருமானிடம்போய் ஒரு சாவிக் கொத்தையாவது வாங்கிக் கொண்டு வரலாமா என்று நினைத்தா னென்றாலும் அதனு லெல்லாம் சந்தேகமுண்டாகுமாதலின் அவன் அதைக் கடைசி உபாயமாக அனுஷ்டிப்பது என்று முடிவு செய்து

கொண்டு தன் தாயார் இருந்த இடத்துக்கே மீண்டும் சென்ருன். மறுபடியும் அவன் அங்கு வந்ததால் பொறுமை இழந்த தாயார் ஒருவிதமாகப் பார்த்தாள்.

அதை உணர்ந்துகொண்ட தினகரம் பிரபு! 'என தன் புள்ள தாயே! 'நீ ஏதோ சஞ்சலப்பட்டுக்கொண்டு இருக்கிருய்போலிருக்கிறதே' என்று கேட்டான். அதற்கு அவள், 'நீ இவ்வாறு என்னிடம் வந்து இவ்வளவு சமாதானமாகக் கேள்வி கேட்பது அபூர்வமாக இருக்கிறது. ஆதலால் நீ ஏதோ முக்கியகாரணத்துடன்தான் இங்குவந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்' என்று கூறினுள். அப்போது அவன், 'தாயே! உன்னுடன் ஏதேனும் வேடிக்கையாகச் சிறிது நேரம் பேசலாமென்று வந்தேனே யொழிய வேறென்றுமில்லை. நேற்று இரவு நடுக் குப்பத்துக் கருகிலுள்ள ஒரு குடிசையில் மூவர் கொலை செய்யப்பட்டதாக ஒரு பெரிய வதந்தி இருக்கிறதே உனக்குத் தெரியுமா?' என்று சொல்லிக்கொண்டே அவளது சாவிக் கொத்து எங்கு இருக்கிறதென்று கவனித்து எதிரில் மேஜை மீது இருப்பதைக் கண்டான். அவன் கூறியதைக்கேட்ட தாயார் தான் இன்னும் பத்திரிகை படிக்கவில்லையென்றும் அவ்விஷய மொன்றும் தனக்குத் தெரியாதென்றும் கூறிவிட்டாள். பிறகு அவன் என்ன பேசுவதென்று நினைத்து, 'மந்தரை இறந்து விட்டாளே. அவளை இன்னும் தகனம் செய்யவில்லைபோலிருக்கிறதே. எப்போது செய்யப் போகிறீர்கள்' என்று கேட்டான். அதற்கு அவள் ஒன்றும் பதில் சொல்லாமல், 'நீ என் அதைக் கேட்கிருய்?' என்ருள்.

அப்போது அவன், 'விஷயத்தைத் தெரிந்துகொள்வதற்காகத்தான் கேட்டேன். நீ பேசுவதைப் பார்த்தால் என்னுடன் சிறிது நேரமும் பேச விருப்பமில்லை போலத் தெரிகிறது. பெண்களே இப்படித்தான் கிராக்கி செய்வார்கள்.

எனக்குமட்டும் பெண்களுடன் பேச எவ்வளவோ ஆவலாகத் தான் இருக்கும், என்று அவன் கூறி முடிந்ததும் ஹேமவதி சீமாட்டி மிகக் கோபத்துடன். 'எப்படிப்பட்ட பெண்களுடன் பேச உனக்கு ஆவல் என்று மிரட்டிக் கேட்டாள். தினகா னும் ஏதோ போக்கிரித்தனமான பதில் கொடுப்பதாக இருந்த சமயத்தில் ஒரு வேலைக்காரன் அங்கு வந்து கிருஷ்ணகிரி ஜமீனின் கார்டியன்களான பஞ்சநாதம் பிரபும் மன மோகனரும் வந்திருப்பதாகத் தெரிவித்துவிட்டுப் போனன். அவன் போனதும் தினகான் 'அந்தக் கிழப்பிணங்கள் ஏன் வந்திருக்கிற தென்பதைச் சுலபமாகவே யூகிக்கலாம், என்று அலட்சியமாகச்சொன்னன். அதைக் கேட்டுக்கோபமடைந்த தாயார். 'அடே, உனக்கென்ன இவ்வளவு கர்வம்? உன்கார் டியன்களை மரியாதையாகநடத்துவதைவிட்டு இப்படி அலட்சியமாகப் பேசலாமா!' என்று கேட்டாள். அதையும் அவன் லட்சியம் செய்யாமல், 'அவர்கள் எனக்கு விரோதமாகச் சதியாலோசனை செய்வதால் அவர்களுக்கு இந்த மரியாதை தான் கொடுக்கப்படும்' என்று சொல்லிக் கொண்டே வேறு பக்கத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஹேமவதிக்கு அதிக ஆத்திரமும்மனக்கஷ்டமும் ஏற்பட்டு விட்டது. இவ்வளவு துணிச்சலுடன் தனக்கே விரோதமாகப் பேசும் பிள்ளையை எதிரில் காண அவளுக்கு வருத்தமும் வெறுப்பும் அதிகப்பட்டது. ஆகவே அவள் அவனுடன் ஒரு வார்த்தையும் பேசப் பிரியப்படாமல் பரபரப்புடன் வேகமாக அந்த அறையை விட்டுப் போனள். ஆனல் சாவிக் கொத்தை அவள் மறந்து விட்டாள். அதை எடுத்துக் கொண்டு போக வேண்டிய அவசியம் அவளுக்கு இருக்க வில்லை. மேலும் அதை யாரேனும் எடுத்துப் பயன்படுத்துவார்கள் என்றும் அவள் நினைக்கவில்லை. சாவியை அவள் விட்டுப் போனதைக்

கண்டு தினகரம் பிரபு மட்டும் அளவிலாச் சந்தோஷமடைந்தான். தன் தாயின் மர்மத்தைக் கண்டு பிடிக்கும் காலம் வந்துவிட்டதென்று மகிழ்ந்தான். தன் மனத்தில். 'ஆ! அந்த கார்டியன்கள் என்னை எங்கேயாவது அனுப்பி விடலாமென மனப்பால் குடிக்கிறார்கள். அது இனிமேல் ஆகக்கூடிய காரியமா? இருக்கட்டும் நான் இனியும் தாமதம் செய்யாமல் என் காரியத்தை முடிக்க வேண்டியதுதான், 'என்று கூறிக்கொண்டே சாவிக்கொத்தை எடுத்துக்கொண்டு பழைய படி ஆடைகள் இருக்கும் அறைக்குச் சென்றான். அவன் அச்சாவிக் கொத்தைக் கொண்டு முன்பு திறக்கமுடியாத பலபெட்டிகளையும் திறந்து பார்த்தான். எதிலும் தான் தேடும் பாஞ்சால இராஜ குமாரியினுடையதைப்போன்ற உடை அகப்படவில்லை. அவன் சாதாரணமாகவே பொறுமையை இழந்தவனாதலால் தேடுவதிலும் நிதானத்தை இழந்து அதிக ஆத்திரத்துடன் ஆடைகளையெல்லாம் மேலும் கீழுமாகப் போட்டான். கடைசியில் அவன் ஒரு பெட்டியின் அடியில் தான் தேடிய ஆடை இருப்பதைக் கண்டு மிகச் சந்தோஷத்துடன் அதை எடுத்து வைத்துக் கொண்டு. தான் தேடியது தாயாருக்கும் தெரியக்கூடாது அல்லது சந்தேகமும் ஏற்படக்கூடாதென்னும் எண்ணத்துடன் எல்லாவற்றையும் ஒழுங்காக முன் இருந்தபடியே அடுக்கி வைத்தான்.

பிறகு அவன் தான்தேடி எடுத்த ஆடையை ஒருபேப்பரில் நன்றாக மடித்துக் கைக்குட்டையில் வைத்துக் கட்டினான். உடனே தன் அறைக்குச் சென்று ஆடையுள்ள மூட்டையைத் தன் பெட்டியில் வைத்துவிட்டுச் சாவிக் கொத்துடன் தன் தாய் முன்பு உட்கார்ந்திருந்த அறைக்கு மெதுவாகச் சென்று சாவிக்கொத்து முன்பு எங்கு இருந்ததோ அதே இடத்தில் வைத்துவிட்டான். பிறகு அவன் அந்த ஆடையை

எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டுச் சென்று ஒரு வாடகை வண்டியிலேறிக் கமல குமாரியின் மாளிகைக்குச் சென்றான். தினகரம் பிரபு அங்கு வந்து சேரும்போது மணி நான்கு இருக்கும். தினகரன் தான் கொண்டுவந்த, தன் தாயின் இரகசியத்தை வெளியாக்கும் ஆடையைச் சந்திரசேகரம் பிரபுவினிடம் கொடுத்தான். அதைக் கண்டதும் எல்லாரும் சந்தோஷ மடைந்தனர். அப்போது தினகரன், 'நண்பா! நீ உன் விஷயத்தை ருஜுப்பிப்பதற்காக வேண்டிய ஆடையையும் கொண்டுவந்து விட்டேன். இனி நீ உன் வாக்கின்படி என் தாயார் சம்பந்தமாக நடைபெற்ற விஷயங்களை யெல்லாம் சொல்லிவிடவேண்டும். அவள் சமாசாரத்தை நான் இப்போதுதான் அதிகம் தெரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் நான் இவ்விடத்துக்குப் புறப்படும்போது என் தாயார் என் காரியஸ்தர்களுடன் ஆழ்ந்து ஆலோசித்துக் கொண்டிருந்தாள். என்னை வெளியில் அனுப்பிவிட அவர்கள் முயல்வார்கள் அதை எதிர்க்க எனக்கு இந்த இரகசியம் தெரியவேண்டும்' என்று கூறினான்.

உடனே சந்திரசேகரம் பிரபுவும் அதை யெல்லாம் சொல்வதாக ஒப்புக்கொண்டு எல்லா விவரத்தையும் சொல்லிவிட்டு மேலும், 'நண்பா! ஒரு தாயைப்பற்றி அவளுடைய மகனே இத்தகைய விஷயத்தைக் கேட்பதென்றால் மிகக் கஷ்டமாகத்தான் இருக்கும். ஆயினும் அவளால் தான் நான் மோகனதாஸைக் கொல்ல முயன்றேன். நேரில்போய் கேட்டபோது ஒரே யடியாய்த் தான் அல்லவென்று சாதிக்கிறாள். இப்போது வெட்ட வெளிச்சமாய் விட்டது. ஆதலால் அவளைப் பழிவாங்க வேண்டுமென்று தீர்மானித்து விட்டேன். நீ அவளை உன் இஷ்டப்படி நடத்த இந்த இரகசியம் உனக்கு மிக்க உதவியாய் இருக்குமல்லவா? ஆதலின்

நீ இதற்காக என்மீது கோபித்துக் கொள்ள மாட்டாய் என்றும் நமது சினேகம் பழையபடியே நீடித்திருக்குமென்றும் நம்புகிறேன்' எனக் கூறி முடித்தான். அப்போது தினகரம் பிரபு 'நண்பா! இதனால் நம் சினேகத்துக்கு என் ஹானி வர வேண்டும். அப்படி யொன்றும் நடந்து விட வில்லை. நீ இஷ்டப்பட்டால் என் தாயைக் காதலிப்பதில் எனக்கென்ன கஷ்டம். ஆனால் அவள் உன்னைத் தன் காரியத்துக்குப் பயன் படுத்திக்கொண்டு பிறகு ஏமாற்ற முயற்சிக்கிறாளே என்பதற்காக நானும் வருத்தப் படுகிறேன். நீ அவளைப் பழிவாங்க முயற்சிப்பதில் அவளை என் கையில் கொண்டுவந்து விட்டிருப்பதால் நான் உனக்கு வந்தனம் செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். அது கிடக்கட்டும். நமது கமலம் இன்று நாடகத்துக்குப் போவதில்லை. ஆகையால் நாம் இன்று இரவு முழுதும் சந்தோஷமாகக் காலங் கழிப்போம். நாளை காலை நான் மறுபடியும் வீட்டுக்குப் போய் என் தாய் என்ன செய்கிறாள் என்பதைப் பார்க்கிறேன். அவள் என்னைத் தொலைக்க முயன்றால் நான் என் ஆயுதத்தைப் பிரயோகிப்பேன்' என்று கூறினான்.

அன்று இரவு அவர்கள் நெடுநேரம் வரை பலவிதமாகக் குடித்தும் தின்றும் காலத்தைப் போக்கினார்கள் என்று கூறிவிட்டால் போதுமானது. மறுநாள் காலை வெளியான பத்திரிகையி லிருந்து மோகனதாஸ் வைத்திய சாலையில் பூரண சுகமடைந்து விட்டதாகச் சந்திரசேகரம் பிரபு தெரிந்துகொண்டதால் அவன் பயமில்லாமல் தன் வீட்டுக்குப் போகத் தயாரானான். அவன் கமலத்துக்கு அவள் அன்புடன் நடந்து கொண்டதற்காக வந்தனம் செலுத்தி விட்டுப் புறப்பட்டான். தினகரனும் தன் வீட்டுக்குச் செல்ல அவனுடனேயே புறப்பட்டான். இருவரும் சென்ற

போது எங்கே அவர்கள் பிரியவேண்டிய இடம் வந்ததோ அங்கு சொற்பநேரம் நின்றுபேசினர். சந்திரசேகரன், 'உனக்கும் உன்தாயாருக்குமிடையில் என்ன நடக்கப்போகிறதென்பதை நான் அறிய ஆவலாக இருக்கிறேன்' என்று தினகரம் பிரபுவினிடம் கூறினன். அதற்குத் தினகரம் பிரபு, 'ஏன், இன்று மாலே நாம் இருவரும் ஒன்ருகக் கூடி எங்கேனும் ஆகாரம் அருந்திவிட்டு ஏதாவது சினிமா, நாடகம் முதலியவற்றிற்குச் சென்று காலங்கழிக்கலாம். கமலமும் இன்றிரவு நடிக்கப்போவதால் நான் எவ்வளவு நேரம் வேண்டுமாயினும் வெளியில் இருக்கலாம்' என்ருன். இவ்வாருகப் பேசிக்கொண்ட பின்னர் இருவரும் பிரிந்து அவரவர் இல்லம் போய்ச் சேர்ந்தனர்.

தினகரம் பிரபு தன் மாளிகையை அடைந்ததும் அங்குள்ள வேலேக்காரன் ஒருவன் அவனே அவனது தாயார் அழைத்ததாகச் சொன்னுன். அவனும் அதைத் தானே விரும்பிவந்தான். ஏதாவது ஒரு காரணம் அகப்பட்டு அவளுடன் சண்டையிட வேண்டுமென்று அவன் விரும்பினுன். ஆகவே அவன் தன் தாயார் எந்த அறையில் இருக்கிருள் என்பதைத் தெரிந்து கொண்டு அங்குபோய்ச் சேர்ந்தான். அங்கே தாயார் தனியாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தைப் பார்த்ததுமே அவன் தன் தாய், ஏதோ ஒருவிதமான முடிவுக்குவந்தே அவ்வாறு உட்கார்ந்திருக்கிருள் என்பதை அறிந்து கொண்டான். அவனேக் கண்டதும் ஹேமவதி சீமாட்டி, 'தினகரா! அங்கே உட்காரு. நாம் இருவரும் சாவகாசமாகவும், அமைதியாகவும் சில விஷயங்களேப் பேசுவோம்,' என்ருள். உடனே அவனும் அங்கிருந்த சோபா ஒன்றில் சாய்ந்துகொண்டு, 'தாயே! அப்படியே ஆகட்டும். எவ்வளவு பேச வேண்டு மென்று

விரும்புகிறுயோ அவ்வளவும் பேசு. நான் கவனமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறேன். நான் இன்னும் அரைமணி நேரம் இங்கேயே இருப்பேனுதலால் அவகாசமாய்ப் பேசலாம்,' என்று பராக்காகவும், அலட்சியமாகவும் சொன்னுன். அதைக் கேட்ட சிமாட்டி, 'நீ ஆரம்பத்திலேயே இவ்வாறு அலட்சியமாகப் பேசுகிருயே, சிறிதேனும் மரியாதை செலுத்த வேண்டாமா? நீ நடந்துகொள்வது நன்ருக இல்லை. ஆயினும் நான் இப்போது அதைப் பற்றிப் பேச விரும்பவில்லை. நான் சொல்வதை நீ கவனித்துக் கொண்டிருக்கிருயா?' என்று கேட்டாள்.

அப்போதும் அவன் அலட்சியமாகவே ஏதோ பதில் சொன்னுன். ஆகவே சிமாட்டி அதிக கோபத்துடன், 'தினகரா! நான் எவ்வளவுதான் இனிமையாகப் பேசினுலும் நீ இவ்வாறுதான் அரட்டையாக இருக்கிருய்; கிடக்கட்டும் விஷயத்தைச் சொல்லுகிறேன் கேள். உனக்குப் பாஞ்சால நாட்டின் தலை நகரில் ஒரு உத்தியோகம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உன் சார்பாக அதை நமது பஞ்சநதம்பிரபு ஒப்புக்கொண்டிருக்கிருர்,' என்றதும் அவன் அசட்டுச் சிரிப்புடன் 'ஆஹா! என்னிடம் அவருக்கு எவ்வளவு அனுதாபம்?' என்று கூறிப் பரிகாசம் செய்தான். அவன் சிரிப்பையோ அல்லது பரிகாசத்தையோ சிறிதும் கவனியாதவள் போல் ஹேமவதி சிமாட்டி மேலும் பேசத் தொடங்கி, 'இன்னும் மூன்று தினங்களில் நீ இங்கிருந்து புறப்படவேண்டியதுதான். மாதத்துக்கு இருநூறு பவுன் வீதம் உன் செலவுக்கு அனுப்பக் கார்டியன்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள். ஏனெனின் நீ உன் அந்தஸ்துக்குத் தக்கபடிதானே வாழ்க்கையை

நடத்தவேண்டும். இதைத்தான் நான்சொல்ல விரும்பினேன். நீயும் அலட்சிய புத்தியைவிட்டு இதில் ஈடுபட்டு முன்னுக்கு வருவாய் என்று நம்புகிறேன்' என்று கூறி முடித்தாள். அப்போது அவன்சிறிதும் அச்சமில்லாமல், 'இப்போது நீ கூறிய படிநடக்க நான் மறுத்து விட்டால் என்ன நேரும்' என்று கேட்டான்.

அவனது கேள்வியைக் கேட்ட அவள் சிறிது சிந்தனைக்குப்பின், 'என்ன நடக்கும் என்பதைப் பற்றிச் சொல்லவேண்டிய ஒரு கஷ்டமான வேலையில் நான் செல்வதற்காக உண்மையில் வருத்தப் படுகிறேன். இருந்தாலும் கேள். நீ மறுப்பாயானால் உன் கார்டியன்கள் சட்டப்படி தங்களுக்குள்ள சகல அதிகாரத்தையும் உன் மீது செலுத்தி நீ அதற்கு உட்படும்படி செய்வார்கள். மேலும் இது சர்க்கார் உத்தரவு என்பதையும் நீ கவனிக்கவேண்டும். அது மட்டுமா? நீ வேலையை ஒப்புக் கொள்ளா விட்டால் உனக்கு இனிமேல் செலவுக்காக ஒரு பைசாவும் கொடுப்பதில்லையென்று கார்டியன்கள் முடிவு செய்திருக்கிறார்கள். நீ எங்கேயாவது கடன் வாங்கினாலும் பத்திரிகைகளில் விளம்பரம்செய்து உனக்குக் கடன் கொடுக்கக் கூடாதெனத் தெரிவித்து விடுவோம்,' என்று கூறினாள். உடனே அவன், தன் தாய் கூறியதற்கெல்லாம் சிறிதும் லட்சியம் செய்யாதவன்போல், 'இவ்வளவுதானா இன்னும் ஏதாவது சொல்லப் போகிறாயா?' என்று கேட்டான். மிகக் கோபமடைந்த ஹேமவதி சீமாட்டி, 'ஆமாம்; அவ்வளவு தான்' என்று சொல்லிக் கொண்டே அவ்விடத்தை விட்டுப் போய் விடுவதற்காக எழுந்தாள்.

அப்போது தினகான் 'போகாதே, சிறிது நேரம் இரு-

நான் உன்னுடன் பல விஷயங்களைப் பேசவேண்டியதாக இருக்கிறது. முதலாவதாக நான் மேது இரத்தினபுரியை விட்டுச் செல்லத் தயாராக இல்லை. ஆதலால் என் உத்தியோக விஷயமாக அவர்கள் செய்துவரும் ஏற்பாடுகளையெல்லாம் உடனே நிறுத்திவிடும்படி சொல்லிவிடு. இரண்டாவதாக மனமோகனனையும் அவரது கூட்டாளியையும் வரவழைத்து அவர்கள் எனக்கு ஏதாவது நிர்ப்பந்தம் செய்தால் அதன் பலனை அவர்கள் அனுபவிக்க நேரிடும் என்பதைத் தெரிவித்து விடு. மூன்றாவதாக என் செலவுக்குக் கொடுக்க வேண்டிய தொகையை இப்போதே இரட்டிப்பாக்க ஏற்பாடு செய்யவேண்டும். நான்காவதாக என் கடன்காரர்களுடைய தொந்தரவினின்றும் நான் விலகுவதற்காக நீ உடனே அந்தக் கடனையெல்லாம் தீர்க்கப்பணம் கொடுக்க வேண்டும்,' என்று கூறினான். அவன் அவ்வாறு பேசும்போது ஹேமவதி சீமாட்டி அவ்வறையின் மத்தியில் நின்றுகொண்டிருந்தாள். அவனுடைய முகத் தோற்றத்திலிருந்தே அவன் தனக்குச் சிறிதும் அடங்கியவனாகத் தோன்றவில்லை. ஆதலால் அவன் தன்னுடைய இரகசியம் எதையேனும் தெரிந்து கொண்டு விட்டானோ என்று நினைத்தாள். சந்திரசேகரம் பிரபுவினுடன் அவன் அதிக சினேகமாதலால் நாகலாபுரம் ஜமீன்தார் வீட்டு விருந்து சம்பந்தமான இரகசியத்தையே அவன் இப்போது தெரிந்துகொண் டிருக்கவேண்டும் என்று நிச்சயித்தாள்.

ஆகவே அவள் தன் கோபத்தையெல்லாம் அடக்கிக் கொண்டு மிக சமாதானத்துடன் பேசுபவள்போல், 'மகனே, நீ யார் பேச்சைக் கேட்டுக்கொண்டு இவ்வாறு செய்கிறாய்? உன் தாயாரையும், கார்டியன்களையும், அரசரையுங்கூட மீறிச் செல்வதற்கு உனக்கு ஆதாரவாக இருப்பதுதான்

என்ன?' என்று கேட்டாள். அப்போது அவன், 'என க்கு ஆதாவு என்ன என்பதைச் சொல்லிவிட்டால் நீ உடனே எனக்கு அடங்க வேண்டியதுதான். சந்திரசேகரம் பிரபு மோகனதாஸுடன் துப்பாக்கிச் சண்டை செய்வதற்கு நீதானே காரணம். உன் சமாசாரமெல்லாம் எனக்குத் தெரியாதென்று நீ நினைத்துக்கொண் டிருக்கிறாய் போலும்!' என்று கூறியதும், ஹேமவதி சிமாட்டி கோபத்தை அடக்க முடியாமல் உரத்த தொனியில் பரபரப்புடன், 'இன்னொரு தரம் அப்படிச் சொல்லாதே. என்னை அவ்வளவு கேவல மாக நினைத்து விட்டாயா,' என்று கத்தினாள். அதைச் சிறி தும் பொருட்படுத்தாமல் அவன், 'அன்று நாகலாபுரம் ஜமீன் தார் வீட்டு விருந்தில் பாஞ்சால ராஜகுமாரியைப்போல் வேடமணிந்து வந்தவளும், சந்திரசேகரனை அங்கு வரும்படி எழுதியவளும், பிறகு மோகனதாஸைக் கொல்லும்படி தூண்டியதும், பிறவும் நீயே என்று ருஜுப்பிக்க என்னால் முடியும்,' என்று கூறியதும் அவனது தாய், 'நீ கேவலம் சந்திரசேகரனைப் போன்ற ஒரு போக்கிரியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு உன் தாயின் உறுதிமொழியை நம்பாம லிருக்கலாமா,' என்று கேட்டாள். அதற்கு அவன், 'நான் சந்திரசேகரத்தின் பேச்சைக் கேட்டு நம்பிவிட வில்லை. உன் பாஞ்சால ராஜகுமாரியினுடையதைப் போன்ற உடையை நான் உன் பெட்டியிலிருந்து எடுத்து விட்டேன். இன்னுமா சந்தேகம்,' என்றான்.

உடனே ஹேமவதி அதிக துக்கத்துடன், 'ஐயோ, நான் செய்த பாவமா? என்னையே கொட்டக்கூடிய ஒரு தேளை யன்றோ நான் பெற்றெடுத்திருக்கிறேன். ஆஹா! நீ செய்த இக்காரியத்தால் அவன் என்னைப் பழிவாங்கி விடு

வானே; எப்படிப்பட்ட பழிவாங்குவான் என்பதையாவது நீ அறிவாயா? இதை சந்திரசேகரனிடம் சொல்லிவிட்டாயா?' என்று கேட்டாள். அவன், 'ஆம், சொல்லிவிட்டேன். ஏன்? அவனுடைய தூண்டுதலின் பேரில்தான் நேற்று பகல் நீ என் கார்டியன்களுடன் பேசிக்கொண்டிருந்தபோது நான் உன் அறையிலுள்ள பெட்டிகளையெல்லாம் தேடி அந்த உடையைக் கண்டுபிடித்தேன்,' என்றான். அதைக்கேட்ட அவள் தன் கர்வமெல்லாம் அடங்கியவளாய் இன்னும் துக்கத்துடன், 'ஆ, தினகரா! இதனால் நீ என்ன செய்துவிட்டாய் தெரியுமா? உன் தாயாரின் கற்பையே கேவலம் போக்கிரியான சந்திரசேகரனுடைய கையில் ஒப்படைத்து விட்டாய். நீ என்னை அவனுடைய இஷ்டப்படி ஆடவேண்டியவளாக்கிவிட்டாய்' என்று கூறிக்கொண்டே கண்ணீர் விட்டாள். தாயின் அந்த துக்ககரமான நிலைமையிலும் சிறிதும் இரக்கம் கொள்ளாதவனாய், 'அப்படியானால் நீ ஏன் அவ்வாறு நடந்துகொள்ளவேண்டும். நான் ஏதோ அசட்டுத்தனமாகவும், போக்கிரியாகவும், அதிக செலவாளியாகவும் இருக்கிறேன் என்பதற்காக என்னை மட்டும் கண்டிக்க நீ எளிதில் முயலும்போது நீ மாத்திரம் வழி தவறி இருக்கலாமா? உன் சங்கதிகள் எனக்குத் தெரிந்துவிடக்கூடாதென்பதற்காக என்னை இந்த நகரத்திலிருந்தே அனுப்பிவிட யோசிக்கிறாயே; அது சரியா? இப்போதுதான் என்ன ஆயிற்று; நான் இதைப்பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. நாம் இருவரும் உடனே சமாதானமாய்ப் போய்விடுவோம். சந்திரசேகரன் உன் விஷயத்தை உன் குமாரனாகிய என்னிடமே சொல்லிவிட்டதால் அதற்குமேல் எவ்விதத்திலும் உன்னைப் பழிவாங்க அவன் விரும்பவில்லை. நான் இந்த இரகசியத்தை அப்படியே மறைத்துவிடுகிறேன். நீ மட்டும்

என் இஷ்டப்படி நடக்கவேண்டும்,' என்று கண்டிப்பாகக் கூறினான்.

அவன் அவ்வாறு பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த அவள் பல விதமாகத் தனக்குள்ளேயே யோசித்துத் தன் நிலைமைக்காகத் துக்கப்பட்டுக் கடைசியில், 'தினகரா! நீ இவ்வளவு வேலையைச்செய்து விட்டாய். உன் தாயாரை அவமானம், ஆபாசம் முதலிய சேற்றின் வழியே இழுத்தாய். என்னிடம் உனக்குச் சிறிதும் நன்றியோ, அன்போ அனுதாபமோ இல்லை. கேவலம் அற்ப குணங்களையுடைய சந்திரசேகரத்தினிடம் என்னை ஒப்படைத்து விட்டாய். அவன் பழிவாங்கப்போவதில்லை யென்பதற்கு என்ன நிச்சயமிருக்கிறது. இவ்வளவு முடிந்த பின்னரும் உன் மனம் இளகவில்லை, ஆகவே உன்னை நான் வெறுக்கிறேன் என்று உண்மையைச் சொல்கிறேன்' என்றாள். அதையும் அவன் லட்சியம் செய்யாமல், 'தாயே! அதெல்லாம் எனக்கு வேண்டாம். இப்போது நாம் பரஸ்பரம் சமாதானம் செய்து கொண்டுவிடுவோம். எனக்காக ஒப்புக்கொண்ட உத்தியோகத்தை ரத்து செய்துவிடும்படி சொல்லிவிடு. நான் சீர்திருந்துவதாக உன்னிடம் வாக்களித்ததாயும், என் விஷயத்தில் நீ அதிக சந்தோஷமும் நம்பிக்கையுமுடையவளாய் இருப்பதாயும் அவர்களுக்குத் தெரிவித்துவிடு. நிறைய பண வருவாயுடன் என்னைவிடு. என் கடனைத் தீர்த்துவிடு. பிறகு நான் உன் ஜோலிக்கு வருவதில்லை. உன் இரகசியமும் வெளியாகாதபடி பார்த்துக் கொள்ளுகிறேன்,' என்றான்.

அதற்கு அவள், 'நான் இப்போது நீ கூறியபடி செய்ய மறுத்துவிட்டால் என்ன ஆகும்' என்று கேட்டாள். அவன், 'மறுத்தால் உடனே நான் உன்னுடன் பகிரங்கமாகச் சண்டையை ஆரம்பித்து விடுவேன். முதலில் நான் எனது

சகோதரிகளாகிய ராஜேஸ்வரி, கற்பகத்தினிடம் அவர்கள் எப்படிப்பட்ட உதாரணத்தையுடைய தாயைப் பெற்றிருக்கி றார்கள் என்பதைத் தெரிவிப்பேன். பிறகு' என்று அவன் இன்னும் ஏதோ சொல்லி முடிப்பதற்குள், 'போதும். போதும், நிறுத்து. நீ என்னை ஆட்கொண்டுவிட்டாய்; உன் நிபந்தனைகளுக்கு நான் உட்பட வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டுவிட்டது. உன் இஷ்டப்படியே நீ சொன்ன வைகளை முடித்துக் கொடுக்கிறேன். நீ உன் தங்கைமாரிடம் எதையேனும் சொன்னால் பிறகு நான் எதற்கும் பயப்படா மல் உனக்கு எதிரியாகத்தான் இருப்பேன். இன்னும் என்னை அழுத்தாமல் பார்த்துக்கொள்' என்று ஹேமவதி சீமாட்டி பணிவுடன் கூறினாள். இவ்வாறு அவர்களுக்குள் சமாதானம் ஏற்படவே ஹேமவதி சீமாட்டி அவ்வறையை விட்டு வேறு வேலையாகப் போய்விட்டாள். தினகரம் பிர புவும் வெளியே சென்று தனக்குவேண்டிய சில சாமான் களை வாங்கிக்கொண்டு தன் நண்பனிடம் கூறியபடி அவனைச் சந்திக்கச் சென்றான்.

---

## 47-வது அத்தியாயம்

——:(0):——

### இரு ஆச்சரிய சம்பவங்கள்

தினகரனை விட்டுப் பிரிந்த ஹேமவதி சீமாட்டி தன் பிரத்தியேக அறைக்குச் சென்று அதிக துக்கத்துடனும் அவமானத்துடனும் உட்கார்ந்தாள். பிறகு திடீரென்று தன் பெட்டிகளைத் தேடிப் பார்த்ததில் உண்மை யிலேயே தான் மிகவும் ஜாக்கிரதையாக மறைத்து வைத்த

பாஞ்சால ராஜகுமாரியினுடையதைப் போன்ற உடை காணப்படவில்லை. ஆகவே அவள் ஒரு ஆசனத்தில் அமர்ந்து கண்ணீர் விட்டாள். எதையும் லட்சியம் செய்யாதவளும், மகா கர்வம் படைத்தவளுமான ஹேமவதி சீமாட்டியே கண்ணீர்விட்டு அழுவதென்றால் அவள் எவ்வளவு அதிகமான துக்கத்துக்களாகி இருக்கவேண்டுமென்பதை யோசித்துப் பாருங்கள். சொற்ப நேரத்துக்குள் அவள் தன்னை ஒருவாறு தேற்றிக்கொண்டு தன்னுடைய எழுதும் அறைக்குச் சென்று பின்வருமாறு ஒரு கடிதம் எழுதினாள்:—

எனதன்புள்ள பஞ்சநதம் பிரபுவே! நான் இப்போது தான் தினகரனுடன் பேசிக் கொண்டிருந்தேன்; அவ்வாறு பேசியதனால் பின்கண்ட சந்தோஷச் செய்தியை உங்களுக்கு அறிவிக்க முடிந்தது. நீங்களும் மனமோகனரும் அவன் விஷயமாகச்செய்திருக்கும் ஏற்பாட்டை அவனுக்குச்சொன்னேன். அவன் உடனே என் காலில் விழுந்து தான் செய்ததெல்லாம் தவறு என்று உணர்ந்து கொண்டதாகவும், என்னுடைய மன்னிப்பும், அவனுடைய கார்டியன்களாகிய உங்களுடைய மன்னிப்பும் தேவையென்றும், வெளி நாட்டுக்குச் சென்றால் அவனுடைய ஞாபகமெல்லாம் எங்கள்மீதே இருக்குமென்றும், அவன் செய்த தவறுகள் எவ்வளவு அபாரமாயிருந்தாலும் அதற்காக இவ்வளவு கடுமையான தண்டனை விதிக்கக் கூடாதென்றும் ஆகவே, அவனை மன்னித்து விட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறான். அவன், அறியாமையினால் அதிக கடன் செய்து விட்டிருப்பதாகவும், அதற்காகத் தான் வருந்துவதாகவும், கடன்காரர்களின் தொல்லையில்லாம லிருப்பதற்காக அதை மட்டும் உடனே தீர்த்துவிட வேண்டுமென்றும் கெஞ்சினான். அவனை: நான்

மன்னித்து விட்டேன். நீங்களும் மன்னித்து விடுவீர்களென்றுநம்புகிறேன். அவனுக்காக ஏற்பாடுசெய்தவேலையை ரத்து செய்துவிட முயற்சிசெய்யுங்கள். அவனது கடன் சம்பந்தமாக ஒரு லிஸ்டை அனுப்புகிறேன், அதைத்தீர்த்துவிட ஏற்பாடு செய்யுங்கள். எவ்வளவுதான் இருந்தாலும் நமது குழந்தை செய்த தவறுதலை நாம் மன்னித்துத்தானே ஆக வேண்டும். மேலும் மோகனசுந்தரம் விஷயமாய் நான் உங்களிடம் அறிவித்தது உங்களுக்கு ஞாபக மிருக்கலாமென்று நம்புகிறேன். அவன் வேலைக்காரனாயினும் ரூபலாவண்யமும் இளமையும் வாய்ந்தவனா யிருப்பதால் அவன் மீது எனது குமாரி ராஜேஸ்வரி காதல் கொண்டிருப்பதாகத் தெரிகிறது எனினும் அவன்விஷயத்தில் நீங்கள் அதிக அக்கரைகொண்டிருப்பதால் அவ்விஷயமாக எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை உங்களிடமே ஒப்படைத்து விடுகிறேன். ஆதலின் இக்கடிதத்தை அவனிடமே அனுப்பி இதற்குப் பதிலும் கொண்டு வரும்படி சொல்லி யிருக்கிறேன். நீங்கள் அவனுடன் நேரில் பேசவும். அவனை என் மாளிகையினின்றும் அனுப்பிவிடுவதே நலம். ஆயினும் நமது ராஜேஸ்வரியும் அவசரப்பட்டு ஏதேனும் தவறான காரியத்தில் இறங்கிவிடாதபடியும் பார்த்துக் கொள்வது நலம். இது விஷயத்தில் நான் ஒன்றும் உங்களுக்குச் சொல்லவேண்டியதில்லை. உங்கள் ஆற்றலுக்கும் அநுபவத்துக்கும் எற்றபடி ஏதேனும் வழி செய்யுங்கள்.

உங்கள் உண்மையுள்ள,
ஹேமவதி சீமாட்டி.

இக் கடிதத்தைக் கவரில்போட்டு மூடி சீல் செய்த பின்னர் விலாசத்தையும் எழுதி முடித்ததும் மணி யடித்தாள். ஏதோ ஒரு சேவகன் வந்தான். அவனிடம் மோகனசுந்தரத்

தைக் கூப்பிடும்படி சொன்னாள். அவன் போய் மாளிகை முழுதும் தேடியும் அகப்படாமற் போகவே எஜமானியிடம் வந்து அவன் காணப்படவில்லை யென்றும், ஆனால் அவன் தலைப் பாகை இரண்டும் அவனது உடையை மாட்டும் இடத் திலேயே இருப்பதால் அவன் வெளியில்எங்கும்சென்றிருக்க முடியாதென்றும் சொன்னான். அவள், 'அவன் மாளிகையில் எங்கும் இல்லாததால் வெளியில்தான் போயிருக்கவேண்டும். அவன் வந்ததும் என்னிடம் அனுப்பு,' என்று கட்டளையிட்டு அச் சேவகனை அனுப்பிவிட்டாள். ஆயினும் அவளது மன தில் ஒருவித சந்தேகம் எழுந்தது. ஆகவே, அவள் உடனே சாதாரணமாகத் தனது புத்திரிகளிருவரும் அடிக்கடி பேசிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் அறைக்குச் சென்றாள். அங்கு கற்பகம் மட்டும் இருந்தாள். அப்போது சீமாட்டி, ராஜேஸ் வரி எங்கே என்று சாதாரணமாய்க் கேட்பதுபோல் கேட் டாள். அதற்குக் கற்பகம் தன் சகோதரி ஏதோ தலைவலி யால் கஷ்டப்படுவதாகச் சொல்லித் தன் அறைக்குப் படுக் கச் சென்றதாகத் தெரிவித்தாள். இதைக் கேட்டதும் ஹேமவதி சீமாட்டிக்குச் சந்தேகம் அதிகரிக்கவே தன் உதட்டைக் கடித்தாள். பிறகு அவள் அங்கிருந்து புறப் பட்டுத் தன் குமாரி ராஜேஸ்வரியின் படுக்கை அறைக்குச் சென்றாள். அவ்வறையின் கதவு உட்புறம் சாத்தப்பட் டிருந்தது. சீமாட்டி அக்கதவின் துவாரத்தின் வழியே பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. அவள் அங்கு வந்து நின்ற சத்தத்தைக் கேட்ட ராஜேஸ்வரி உள்ளே இருந்து கொண்டு யாரென்று விசாரிக்கவும் தாயார், 'நான்தான் உன் தாயார். உனக்கு ஏதோ தேக அசௌக்கியமென்று கற்பகம் கூறினாள்' என்று சொல்லி முடிப்பதற்குள் ராஜேஸ் வரி கதவைத் திறவாமலேயே, 'எனதன்புள்ள தாயே! விரை

வில் சௌக்கியமாய் விடும். கவலைவேண்டாம்' என்று சொல்லி விட்டாள்.

அதைக்கேட்ட ஹேமவதி அங்கிருந்து புறப்பட்டாள் என்றாலும் வெகு தூரத்தில் எங்கும் போய்விடாமல் அந்த அறைக்கு எதிரிலிருந்த ஒரு அறையின் கதவின் பின்னால் ஒளித்துக்கொண்டு கவனித்தாள். சீமாட்டி சென்ற சிறிது நேரத்துக்கெல்லாம் ராஜேஸ்வரியின் அறைக்கதவு திறக்கப் பட்டது. ஆனால் யாரும் வெளியில் வரவில்லை. ராஜேஸ்வரி தான் பாதி ஆடையுடன் கதவின் அருகிலேயே நின்று அப் படியும் இப்படியுமாக நாற்புறங்களிலும் பார்த்தாள். இதை எதிரிலிருந்து கவனித்த சீமாட்டி இன்னும் பதுங்கிப் பார்த் தாள். ராஜேஸ்வரி அறையில் நுழைந்ததும் மோகன சுந் தரம் அவ்வறையிலிருந்து வெளியே வந்து சர சர வென்று கீழ்க்கட்டுக்குப் போய்விட்டான். ஹேமவதி சீமாட்டியின் சந்தேகம் இப்போது சரியானதென ருஜுவாய் விட்டது. தன் மூத்த குமாரியின் அடாத செயலை நேரில் கண்ட அவ ளது மனம் என்ன பாடு பட்டிருக்குமென்று நினைக்கிறீர் கள்? சில நிமிஷ நேரம்வரை அவள் அங்கேயே பதுமை போல் நின்றாள். உடனே அவள் திடீரென்று தன் குமாரி ராஜேஸ்வரியின் அறைக்குச் சென்றாள். கதவு திறந்திருந் தது. ராஜேஸ்வரி அலங்கோலமான ஆடையுடன் படுக்கை யில் இருந்தாள். தாயைக்கண்ட அவள் பீதியடைந்தாள்; எனினும் எதற்கும் பயப்படாதவள்போல் உடனே எழுந்து தன் கூந்தலை முடித்துக்கொள்ள பெரிய நிலக் கண்ணாடி யின் எதிரில் போனாள்.

அப்போது ஆத்திரமடைந்திருந்த ஹேமவதி சீமாட்டி தன் குமாரியின் கையைப் பிடித்துக்கொண்டு, 'ராஜேஸ்வரி! என்ன காரியம் செய்தாய். உன்னை நான் இழந்தேன். நீ

மகா பாவம் செய்தவள்' என்று பரபரப்புடன் கூறினாள். தன் தாய் எல்லாவற்றையும் அறிந்துகொண்டு விட்டாளே என்னும் வெட்கம் சிறிது அவளது முகத்தில் தோன்றிய தென்றாலும் அதை அவள் சமாளித்துக்கொண்டு தைரியத்துடன், 'தாயே! நாம் பரஸ்பரம் ஒருவர் விஷயத்தில் மற்றவர் தலையிடா திருத்தலே நல்லது' என்றாள். அதைக் கேட்டதும் சீமாட்டி திடுக்கிட்டுப்போய் 'இவளுக்கும் நமது ரகசியம் ஏதோ தெரிந்திருக்கிறது' என்று நினைத்துத் தன் நிலைமையைப் பற்றி வருந்தி, 'அப்படியானால் நீங்களெல்லாம் என்னை எதிர்க்கப் போகிறீர்களா?' என்று கூறிக்கொண்டே மேலே ஒன்றும் பேச முடியாமல் திக்பிரமையுடன் நின்றாள். ராஜேஸ்வரியும் தன் தலையை மூடித்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தினாள் என்றாலும் எப்படியாவது தன் தாயாருக்கு விட்டுக் கொடுக்காமல் இறுதிவரை போராடி விடுவது என்று நிச்சயித்தாள். இதற்குள் ஹேமவதி சீமாட்டி சமாளித்துக்கொண்டு, 'பெண்ணே! சங்கதியைச் சொல்லிவிடு; அடாத செயலை நிச்சயமாக நம்பவேண்டியதுதானே' என்று கேட்டாள். அதற்கு அப்பெண், 'தாயே! இனி நான் மறைக்க விரும்பினாலும் மறைப்பதில் பிரயோசனமில்லை. நீ ஒளிந்துகொண் டிருந்து எல்லாவற்றையும் கவனித்திருக்கிறாய். ஆதலால் நீ கண்டதை நம்பவேண்டியதுதான்' என்று தைரியமாகக் கூறிவிட்டாள்.

இதைக் கேட்ட தாயார் அதிக ஆத்திரத்துடனும் துக்கத்துடனும், 'ஐயோ கடவுளே! இதுவும் பொருந்துமா? கேவலம் ஒரு வேலைக்காரனிடமா சம்பந்தம்,' என்று கேட்டாள். உடனே மகள் தாயை எதிர்ப்பவள் போல், 'ஏன் கூடாது? நீ மட்டும் எங்கள் சித்திர ஆசிரியர்மீது காதல் கொள்ளலாமோ' என்று துணிச்சலுடன் கேட்டு விட்டாள்.

அதைக் கேட்டதும் தாயார் நடுக்கத்துடன், 'ஆ, எனக்குத் தெரிந்து விட்டது. பாவி, தினகரன் துரோகம் செய்து விட்டான். அவன் தான் சமாசாரத்தை வெளியிட்டிருக்க வேண்டும்' என்று கதறினாள். அப்போது ராஜேஸ்வரி, 'இல்லை, ஆத்திரப்படவேண்டாம். உன்னை யாரும் துரோகம் செய்யவில்லை. தினகரன் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை. அன்று நீயும் செல்வநாதரும் பேசியதை நானும் எனது தங்கையும் கேட்டுக்கொண்டிருந்தோம். ஆகவே பெரிய சீமாட்டி அவளது குமாரிகளின் ஆசிரியரை மோகித்தால் குமாரி வேலைக்காரனை ஆசிப்பதில் குற்றமென்ன இருக்கிறது?' என்று கேட்டாள்.

அதைக்கேட்ட தாயார் அதிக கோபத்துடன் தன் காலால் தரையில் ஒரு அறை அறைந்து, 'பெண்ணே! இப்போது நீ கூறிய அந்த இளைஞன் விஷயத்தில் நான் அதிக பரிசுத்தமாகவும், அவனது கையும் என்மீது படாமலுமே இருக்கிறேன் என்பது சத்தியம்' என்றாள். அதற்கு அப் பெண், 'ஆம், நீ பரிசுத்தமாயிருப்பதற்குக் காரணம் அந்த கௌரவம் பொருந்திய இளைஞனே யொழிய நீ அல்ல. அவனுடைய இரு கரங்களிலும் நீ சாயவில்லை யென்றால் அக் கரங்கள் உன்னை ஏற்றுக்கொள்ளவில்லையே யொழிய நீ எதற்கும் தயாராகத்தான் இருந்தாய்,' என்று கூறியதும் சீமாட்டி அதிக வெட்கமடைந்து ஒரு தாயும் குமாரியும் இப்படியெல்லாம் பேசும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டதே ஆபாசமெனக் கருதி ஏதோ பைத்தியக்காரிபோல் சில நிமிஷ நேரம் வரை அசையாமல் ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள். சிறிது நேரங்கழிந்ததும் சீமாட்டி தன் குமாரியைப்பார்த்து, 'பெண்ணே! நடந்துபோன காரியத்தைப்பற்றி வருந்துவதில் பயனில்லை. இருந்தாலும் இனியாவது நமக்கு கௌரவத்

தையே அளிக்கும் வழியைக் கவனிப்பாயா?' என்றதும் பெண், 'தாயே! உன்னை அவமானப்படுத்த வேண்டுமென்று நான் நினைத்ததேயில்லை. என் நிலைமையைச் சமாளித்துக் கொள்வதற்காகவே உன்னைப்பற்றியும் பிரஸ்தாபிக்க நேர்ந்தது. உண்மையை மறைப்பதில் பிரயோசனமில்லை. மோகனசுந்தரம் நமது வேலைக்காரனே யாயினும் நான் அவனை மனமாரக் காதலிக்கிறேன். அவனை நான் விவாகம் செய்து கொள்ள முடியாது என்பது எனக்குத் தெரியும். ஆயினும், நீ மோகன தாஸுடன் எத்தகைய சம்பந்தம் வைத்துக் கொள்ளநினைத்தாயோ அதேமாதிரி சம்பந்தத்தையே நானும் இந்த இளைஞனுடன் வைத்துக் கொண்டேன். ஆகையால் நீ இதற்காகவெல்லாம் கவலைப்படாமலும் என்விஷயத்தில் தலையிடாமலும் இரு. என் விஷயத்தையே நானே சமாளித்துக் கொள்வேன். பரஸ்பரம் ஒருவரை யொருவர் கவனியாது அவரவர் வழியை அவரவர் கவனிப்போம். அப்போது நமக்குள் தகாறு ஏற்படாது' என்றாள்.

இதைக் கேட்டதும் ஹேமவதி சீமாட்டி ஒரு வார்த்தையும் பேசாமல் அவ்விடத்தை விட்டுச் சென்றாள். அவளது மனம் நெருப்பில் விழுந்த புழுப்போல் துடித்தது. அவளுடைய மக்கள் அவளுக்கு விரோதமாக வேலை செய்வதுடன் அதைச் சாதகமாகக்கொண்டு தங்கள்காரியங்களையும் சாதித்துக்கொள்ளப் பார்க்கின்றனர். தினகரன் அவளை யடக்கிவிட்டுத் தன் இஷ்டப்படி நடக்க உரிமை பெற்றுவிட்டான். அது போலவே இராஜேஸ்வரியும் கற்புநிலை தவறியதுடன் தாயை மடக்கித் தன் விஷயத்தில் தாய் தலையிடக் கூடாதவாறும் செய்துவிட்டாள். கற்பகம்மட்டும் யோக்கியமாகவும் அடக்கமாகவும் நடப்பாள் என்று எப்படி நம்ப முடியும்? அவளும் துளசிங்கம்பிரபுவின் ஆசைநாயகியாகப்போக ஏற்பாடுநடந்து

கொண்டிருக்கிறது. இவ்வாறெல்லாம் சில நிமிஷங்கள் வரை யோசித்த பின்னர் சீமாட்டிக்குத் திடீரென்று தான் பஞ்சநதம் பிரபுவுக்கு எழுதிய கடிதத்தின் ஞாபகம் வந்தது. உடனே மணியடித்தாள். இம்முறை மோகன சுந்தரமே எதிரில்வந்து நின்றான். தன் பெண்ணின் காதலனாகவும் தன் குடும்பத்துக்கே அவமானத்தை விளைவிக்கின்றவனாகவும் இருக்கும் அவனைக் கண்டதும் அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டது. உடனேவெளியில்போ என்று சொல்லிவிடலாமா என்றும் நினைத்தாள். ஆயினும் எந்தக் காரியத்தையும் நிதானமாகச் செய்வதே சரியாதலால் தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அவனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து அதைப் பஞ்சநதம் பிரபுவிடம் கொடுத்து விட்டுப் பதில் வாங்கிக் கொண்டு வரும்படிகட்டளையிட்டாள். அவனும் அவளுக்கு வந்தனம் செலுத்திவிட்டு வெளியே போய்விட்டானென்றாலும் அவன் சீமாட்டியின் எதிரில் நின்றிருந்த சொற்ப நேரத்தில் அவன் மனம் மிகக் குழப்பமடைந்திருந்தது. ஏனெனின் சீமாட்டி ராஜேஸ்வரியின் அறைக் கதவைத் தட்டியபோது உள்ளே இருந்தவன் அவன்தானே. குற்றமுள்ள நெஞ்சு குறு குறு என்பதில் ஆச்சரியமென்ன இருக்கப் போகிறது ?

மோகன சுந்தரம் அக்கடிதத்துடன் பஞ்சநதம் பிரபுவின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருக்கையில் தனக்கு மீண்டும் ஒரு நல்லசந்தர்ப்பம் அகப்பட்டதாகவும், தான் சிறுவனாயிருக்கும்போது மூன்றுமுறை சந்தித்தபோதெல்லாம் தன்னை அன்புடன் வாரி யணைத்துக் கொண்டாடியவளும், அவள்தான் தன் தாயாக இருக்க வேண்டுமென்று நன்றாய் கருதப்படுகிறவளுமான அம்மாது யார் என்பதைத்தெரிவிக்க வேண்டுமென அப்பிரபுவின் காலில்விழுந்து கேட்கலாமென்றும் யோசித்துக்கொண்டே போனான். பிரபுவின் வீட்டை

யடைந்ததும் தான்வந்திருப்பதாக ஒருசேவகனிடம்சொல்லி யனுப்பவும் அச் சேவகன் எஜமானைப் பார்த்துவிட்டு வந்து மோகனத்தை அழைத்துக்கொண்டு மாடியிலுள்ள ஒரு அறைக்குச் சென்றான். அங்கே பிரபு மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தார். சேவகன் மோகனத்தை விட்டதும் வெளியில் போய்விட்டான். பிரபு மோகன சுந்தரத்தைப் பார்த்து, 'மோகனம்! நான் கேட்கப் போவதற்கெல்லாம் அவசரப்படாமல் நிதானமாக யோசித்துப் பதில் சொல். இப்போது நீ செய்கிற தொழிலே உனக்கும் போதுமானதா? வேறு ஏதேனும் இன்னும் சிறந்த தொழில் பார்த்தால் சந்தோஷந்தானே. நீ கொஞ்சம் படித்திருப்பதுடன் புத்திசாலியாகவும் இருக்கிறாய். ஆதலால் சர்க்கார் காரியாலயத்தில் சிறியகுமஸ்தா வேலை ஒன்று உனக்கு ஏற்பாடு செய்யலாமென்று இருக்கிறேன்' என்று சொல்லி முடித்ததும் ஒருசேவகன் அங்குத் தோன்றி நாகலாபுரம் ஜமீன்தார் பிரபுவைக்காண வந்திருப்பதாகத் தெரிவித்தான். அதன்மீது பிரபு மோகனத்தினிடம் அங்கேயே சிறிது நேரம் தங்கியிருக்கும்படி சொல்லிவிட்டு அவ்வறையை விட்டு வெளியே சென்றார்.

மோகன சுந்தரம் அறையில் தனியாக இருந்தபோது பொழுது போக்குக்காக அங்கே மேஜைமீதிருந்த பல படங்களடங்கிய ஒரு புஸ்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த புஸ்தகம் 1829 ஆம் வருஷத்தில் அதாவது அப்போதைக்குச் சுமார் 15 வருஷங்களுக்கு முன் வெளியிடப்பட்டது. 'அரச சபையின் அழகியமாதர்' என்று அதன்மீது குறிப்பிடப்பட்டிருந்தது. அதாவது அரச மாளிகையில் சம்பந்தப்பட்ட அழகியமாதர்களின் அழகான படங்கள் பல அதில் இருந்தன. மோகனம் அப்படங்களை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே போனபோது ஒரு படத்தைக் கண்ட

தும் அவன் ஆச்சர்யமடைந்ததுடன் திடுக்கிட்டுப் போனான். அதுதான் அவன் தன் தாய் என்று நினைத்த மாதின் படம். அம்மாதின்பெயர் என்னவென்று அறிவதற்காக மிக ஆவலுடன் பார்த்தான். அப்படத்தின்கீழ் எத்தகைய பெயரையும் காணோம். எந்தப் பக்கத்தைத் திருப்பிப்பார்த்தாலும் அப்படத்தின் விவர மொன்றையும் அறிய முடியவில்லை. ஆகவே அதிக ஏமாற்ற மடைந்தான். அவன் தன் பிறப்பு வரலாறுகளைப் பற்றியும், தன் தாயாராக இருக்க வேண்டு மென்று சந்தேகப்பட்டது பற்றியும் ராஜேஸ்வரியிடம் சொல்லிக் கொண்டதை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். ஆதலின் அப்படத்தைக் கண்டதும் அவன் அதிக ஆர்வத்துடன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான்.

மோகன சுந்தரம் படத்தில் கண்ட அம்மாதின் தோற்றத்தைப் பற்றிச் சிறிது கவனிப்போம். அம்மாதின் முகம் கோழி முட்டை வடிவம் போலவும், சிறிது உயர்ந்த நெற்றியுடனும் காணப் பட்டது. நீண்ட கூந்தலை யுடையவளாக இருந்தாள். அக்கூந்தலில் ஒரே ஒரு வெள்ளைரோஜா இருந்து கொண்டு அதற்கு அழகைக் கொடுத்தது. அவளுடைய கண்கள் கருமையாக இருந்ததுடன் அதிக பிரகாசத்தையுடையவையாயும் இருந்தன. அவளது நாசியும் வாயும் மிக அழகான அமைப்புடன் கூடியிருந்தன. அவளுடைய முகத்தில் சந்தோஷமும் பெருந் தன்மையும் காணப்பட்டது. அவள் மாலைவேளை உடையை அணிந்திருந்தபடியால் அவளது தோள் முதலிய அங்கங்கள் திரண்டு உருண்டு காணப்பட்டன. பொதுவாக அப்படத்திலுள்ள அம்மாது மிக்க ரூபவதியாயும் சுமார் முப்பது வயதானவளாயும் காணப்பட்டாள். அவள் உருவத்தைக் கண்ட மோகன சுந்தரம், 'என்தாய்

என்று கருதும் இம்மாதைக் கடைசியாக 1834 ஆம் வருஷத்தில் கண்டேன். அப்போது அவளுடைய வயது முப்பத்தாறு இருக்குமென்று நினைத்தேன். இம்மாது அரசாங்க மாளிகையைச் சேர்ந்த ரூபவதியாக இருக்கவேண்டும். அவள் பெயர் ஏன் இப்புஸ்தகத்தில் பதிக்கவில்லை. இது என் தாயின் படமேயாயின், நான் இதற்கு ஒரு முத்தம் கொடுக்க வேண்டியது தான். ஏனெனின் உண்மை ஆளையே நான் அணைத்துக் கொண்டிருக்கிறேனல்லவா?,' என்று தன்னுள் நினைத்துக் கொண்டு நின்றபடியே குனிந்து அப்படத்தின் முகத்தின் மீது தன் முகத்தை வைத்து அழுத்திய போது அவனது கண்களினின்றும் கண்ணீர் வடிந்தது.

அந்தச் சமயத்தில் அறையில் யாரோ வரும் சத்தம் அவனுக்குக் கேட்டதால் அவன் அவசரமாக நிமிர்ந்து நின்று தன் கைக் குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டான். அப்போது பஞ்சநதம் பிரபுவும் உள்ளே நுழைந்து விட்டபடியால் மேஜை மீதிருந்த புஸ்தகம் திறக்கப்பட்டிருப்பதைக் கண்டு அவசரமாக அதனருகில் ஓடினார். இதற்குள் மோகன சுந்தரம் அவசரம் பொறுக்க முடியாமல் மிக பரபரப்புடன், 'எனது பிரபுவே, அந்தப்படம் யாருடையது என்பதை நான் தெரிந்து கொண்டுவிட்டேன். தயவு செய்து அம்மாது என்னுடைய தாய் தானே என்பதைத் தெரிவித்து விடுங்கள்,' என்று ஆவலுடன் கேட்டான். அதற்கு அவர் ஒன்றும் தெரியாதவரைப் போலும், அத்தகைய உணர்ச்சியையும் அடையாதவரைப்போலும் நிதானமாக,'வாலிபனே என்னை அப்படிப்பட்ட கேள்விகளையெல்லாம் கேட்க வேண்டாம். நீ ஏன் இம்மாதிரி ஒரு மயக்கம் நீண்டகாலமாக் கொண்டிருக்கிறாய்? உன் சொந்த சமாசாரங்கள் எனக்குத் தெரிவதற்குக் காரணமென்ன?' என்று கூறினார்.

அப்போதும் அவன் விடாமல் தன்னைப்பற்றி ஏதோ மர்மம் இருப்பதாகவும், அது அப்பிரபுவுக்குத் தெரிந்திருக்க வேண்டுமென்றும், அதைச் சொல்லிவிட வேண்டுமென்றும் பலவிதமாகவும் வருந்திக் கேட்டான். பிரபு சற்றும் விட்டுக் கொடுக்காமல் தனக்கு அதைப்பற்றி ஒன்றுமே தெரியாதென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டு, 'இப்போது நாம் நமது வேலையைக் கவனிப்போம். நீ வேறு நல்ல வேலையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறாயா? என்பதை நன்றாக யோசித்துச் சொல். அவசரப்பட்டு ஒன்றும் பதில் சொல்லிவிட வேண்டாம். அவசரத்தினால் எவ்வளவோ மனிதர்களும் தேசங்களும் பல கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்திருக்கிறது' என்றார். அப்போதும் அந்த வாலிபன் அவர் கேட்டதற்கு பதில் சொல்லாமல், 'பிரபுவே! இப்போது என் மனம் சாதாரண இவ்வுலக விஷயங்களில் செல்லாது. என்னுடைய சிந்தனையெல்லாம் இப்போது நான் கண்ட அந்தப் படத்தினிடம் சென்றிருக்கிறது. தயவுசெய்து அப்புஸ்தகத்தை நீங்கள் எனக்குப் பரிசாக அளிப்பீர்களா? அப்படி நீங்கள் அதைக் கொடுக்க மறுத்தாலும் நான் விலைக்காவது அதை வாங்கிவிடுவேன்,' என்று கூறிக்கொண்டே அந்தப் புஸ்தகத்தின் அட்டையைப் பார்த்து அதிலிருந்த அந்தப் புஸ்தகத்தைப் பிரசுரித்தவரின் விலாசத்தைக் குறித்துக் கொண்டான்.

இதையெல்லாம் கண்ட பஞ்சநதம் பிரபு முதலில் சிறிது மனக்குழப்ப மடைந்தாரென்றாலும் அவர் தக்க அநுபவமும் நிதானபுத்தியு முடையவராதலால் அதைச் சமாளித்துக் கொண்டு பொறுமையுடன், 'வருஷத்துக்கு நூற்றைம்பது பவுன் வரும்படியுள்ள ஒரு சர்க்கார்வேலையை உன் போன்ற இளைஞன் மறுக்கக்கூடாது. நான் உன் விஷயத்தில் ஏதோ

சொற்ப அக்கரை கொண்டிருப்பதால் உன் க்ஷேமத்தை உத்தேசித்தே இவ்வாறு பெரிய வேலைக்குச் சிபார்சுசெய்ய முனைந்தேன்,' என்று மோகனசுந்தரத்தினிடம்கூறினார். அப்போதும் அவ்வாலிபன், 'என தன்புள்ள பிரபுவே' இப்போதைய என் மனோ நிலைமையில் நான் வேறு எதைப் பற்றியும் யோசிக்க முடியாது. எனக்கு மிக அவசியமான விஷயத்தில் ஒரு வார்த்தையைக்கூட வெளிவிடமாட்டேன் என்கிறீர்கள். ஆதலின் இனி உங்களுடைய உதவி எதிலும் எனக்குத் தேவையில்லை' என்று வெறுப்படைந்தவன்போல் கூறியதும் தான் வந்தவேலை என்ன ? பதில் எடுத்துக்கொண்டு போக வேண்டாமா என்பதையும் மறந்து திடீரென்று அம்மாளிகையைவிட்டு வெளியே வந்துவிட்டான். வெளியேவந்த அவன் தான் செய்வது, இன்னதென்றும் தோன்றாதவனாய் மிக அவசரமாக நடந்து, தான் கண்ட அப்புஸ்தகம் பிரசுரிக்கப் பட்ட கம்பெனிக்குப் போய்ச் சேர்ந்தான். தான்கண்ட அப் புஸ்தகத்தின் விவரத்தைக் குறிப்பிட்டு அதன் பிரதி யொன்றைக் கொடுக்கும்படி கேட்டான், ஆனால் பிரசுரகர்த்தர் தன்னிடம் ஒரு பிரதிகூட இல்லையென்று சொல்லிவிட்டார். மேலும் அவர், 'ஒருபிரதிகூட யாருடையகைவசத்திலும் இராது. நீ நூறு பவுன் கொடுத்தால் கூட உனக்குக் கிடைக்காது. இவ்விஷயத்தில் வீண் பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டாம். அந்தப் புஸ்தகம் யாருக்கு அவசியமோ அப்படிப் பட்டவர்களுக்காக மட்டும் பிரசுரிக்கப்பட்டு அவரவர்களுக்குக் கொடுத்துவிடப்பட்டன. அவர்கள் எக்காரணத்தைக் கொண்டும் அதை எவருக்கும்கொடுக்கமாட்டார்கள்' என்று விவரமாகக் கூறினார்.

இதனால் ஏமாற்றமடைந்த மோகனசுந்தரம் சோர்வடைந்து விடாமல் இன்னும் ஏதேனும் முயற்சி செய்ய

வேண்டுமென்னும் எண்ணத்துடன் அப் புஸ்தக வியாபாரி யைப் பார்த்து, 'ஐயா, நீர் வெளியிட்ட அப் புஸ்தகத்தில் ஒரு பெயரும் குறிப்பிடாமல் படம் என்று மட்டும் எழுதப் பட்டிருக்கும் படம் எந்த மாதினுடையது என்பதும் அந்த சித்திரக்காரர் எங்கு இருக்கிறார் என்பதும் உமக்குத் தெரியுமா' என்று கேட்டான். அந்த வியாபாரி, 'ஆம், அந்த மாதிரி ஒரு படம் அப் புஸ்தகத்தில் இருப்பதாக எனக்கு ஞாபகமிருக்கிறது. ஆயினும் அம்மாது யார் என்பது எனக்குத் தெரியாது. அதைத் தயாரித்த சித்திரக்காரர் இறந்து விட்டபடியால் அது சம்பந்தமான எந்த விஷயமும் உனக்கு அகப்படாது' என்று கூறினார். இதனாலும் அதிக ஏமாற்றமடைந்த மோகனம் என்ன செய்வதென்று தோன்றாமல் அந்த கம்பெனியை விட்டு வெளியே வந்து உற்சாகமற்றவனாயும், ஏதோ சிந்திப்பவனாயும் தலையை சாய்த்துக் கொண்டே மெதுவாக ஹேமவதி சீமாட்டியின் மாளிகையை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அவ்வாறு நடந்தபோது, பஞ்சநதம் பிரபுவின் வீட்டிலிருந்த அப்புஸ்தகத்தினின்றும் தன் மனத்தைக் கவர்ந்த அப்படத்தைக் கிழித்துக்கொண்டு வாராமற் போனேமே என்று நினைத்தான். அப்போது ஒரு யௌவனமாது, 'மோகனம்! ஆ, கடவுளே! மோகனமா யிருக்க முடியுமோ? ஆம், ஆம்; மோகனம்தான்' என்று சொன்னதைக் கேட்டு அவன் ஆவலுடன் தலையைத் தூக்கிப் பார்த்தான். எதிரில் தன் சகோதரி நிற்பதைக் கண்டு அளவிலா ஆனந்தமடைந்தான்.

இந்த அத்தியாயத்தை முடிக்கு முன் ஹேமவதி சீமாட்டியின் குடும்ப அலங்கோலத்தை வாசகர்களின் நினைவுக்குக் கொண்டு வர விரும்புகிறோம். ஹேமவதி சீமாட்டி ஏதோ பலவித இரகசியங்களில் அகப்பட்டுக்கொண்டு அதைத் தன்

மக்கள் அறிந்துகொண்டு விடுகிறார்களே என்று கவலைப்படு கிறாள். தினகரனே கண்டபடியெல்லாம் குடியிலும் கூத்தி லும் வாழ்க்கையை நடத்திவிட்டு இன்னும் பணம் பறிப் பதற்காகத் தாய்க்கே துரோகம் செய்கிறான். ராஜேஸ் வரியோ சேவகனுடனேயே சம்பந்தம் வைத்துக்கொண்டு அதை மறைக்கத் தாயின் குற்றத்தை வெளியாக்குகிறாள். கற்பகமும் அன்னியன் ஒருவனிடம் மையல்கொண்டு அப் படியுமில்லாமல் இப்படியுமில்லாமல் தவிக்கிறாள். நிறைய சொத்து இருப்பதால் பணம் எப்படி வருகிறது எப்படிப் போகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை. பெரிய மாளி கையாக இருப்பதால் ஒரு மூலையில் ஒரு இரகசியம் நடந் தால் அதே மாளிகையில் இருப்பவர்களுக்கு அது தெரிவ தில்லை. இவ்வாறாகவே படித்தவர்களென்றும், பணக்காரர்க ளென்றும் சொல்லும் பெரிய குடும்பங்கள் பலவற்றில் நடை பெறுகின்றன. ஆதலால் சாதாரண மக்கள் அப்படிப்பட்ட வர்களுடைய வாழ்வைக் கண்டு பிரமிப்படைய வேண்டிய தில்லை. எளிய வாழ்வும், பரிசுத்த வாழ்வும் நடத்துவதே சிலாக்கியமானதென்னும் எண்ணம் மக்களுக்கு உண்டானால் அதுவே போதுமானது.

---

## 48-வது அத்தியாயம்

---

### சகோதரனும் சகோதரியும்

அதிக ஜன நடமாட்ட மில்லாத ஒருதெருவின் ஒரு மூலையில் நாம் மேலே விவரித்தவாறு மோகனசுந்தரம் தன் சகோதரியைச் சந்தித்தான். அவளைக் கண்டதும் அவன், 'ஆ! என் காணாமற்போன சகோதரியே!'

என்று தான் செய்வது இன்னதென்று தெரியாமலே அவள்மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அவளைத் தழுவிக் கொண்டான். மிக்க ரூபலாவண்யமும், கம்பீரமான தோற் றமும் உடைய அவளும் அவனை அணைத்துக்கொண்ட பின் னர், 'சகோதரா! நீ இன்னும் உயிருடன் இருக்கிறாயா? உன்னை இன்று காணும் பாக்கியம் கிடைத்ததற்காக இறை வனுக்கு வணக்கம் செலுத்துகிறேன்,' என்றாள். அவ்வழியே சென்ற ஒருவர் இருவர் அவர்களுடைய நிலைமையைக் கண்டு அநுதாபத்துடன் சென்றனர். அவர்கள் நின்றுகொண் டிருந்த இடத்துக்குச் சமீபத்திலிருந்த வீட்டுக்காரன், அவர் களுடைய நிலைமையை அவர்களின் சம்பாஷணையால் அறிந்துகொண்டு தெருவில் பேசுவதைவிடத் தன் வீட்டில் வந்து உட்கார்ந்துகொண்டு பேசும்படி அநுமதி கொடுத் தான். அதன்மீது சகோதரனும் சகோதரியும் உள்ளே சென்று நிதானமாகப் பின்வருமாறு பேசினர்:

அம்மாள் தன் சகோதரனிடம், 'மோகனம்! இனியும் நாம் இவ்வாறு இருக்கக் கூடாது. நீ சேவகனுடைய உடையை அணிந்துகொண் டிருக்கிறாயே? யார் வீட்டில் வேலை செய்கிறாய்?' என்று கேட்க அவன், 'கிருஷ்ணகிரி ஜமீன்தாரணியார், ஹேமவதி சீமாட்டியின் மாளிகையில்' என்று சொல்லுமுன்பதற்கு முன்னரே அவள், 'கிருஷ்ண கிரி ஜமீன்தாரிணி வீட்டிலா,' என்று ஆச்சரியத்துடன் கேட்டதால் அவளுக்கு அந்த ஜமீன்தாரிணி தெரிந்திருக்குமோ என்று மோகனம் நினைத்துக்கொண்டு விசாரித்தான். ஆனால் அவள் தனக்குத் தெரியாதென்றும், அப்பெயரைத்தான் அடிக்கடி கேட்டிருப்பதாகவும் சமாதானம் கூறினாள். அவன் அவளிடம், 'சகோதரி! ஏன் நாலைந்து வருஷங்களாக எனக்கு உன் க்ஷேமசமாசாரம் தெரிவிக்காமலேயே

இருந்து விட்டாய்' என்று கேட்டான். அதற்கு அவள், 'எனதன்புள்ள சகோதரா! நான் என்ன செய்வேன். நீ இறந்துவிட்டதாக ஒரு பொய் வதந்தி எனக்கு அறிவிக்கப் பட்டது. பிறகு விசாரித்ததில் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறதென்று தெரிந்து கொண்டேன். நீ இறந்து விட்டாய் என்று கேள்விப்பட்டதும் நான் அடைந்த துக்கத்திற்கு அளவேயில்லை. ஆயினும் எல்லாம் வல்ல இறைவனருளால் இன்று உன்னைச் சந்தித்ததில் நான் அடையும் சந்தோஷத்திற்கு அளவு கிடையாது. முதலில் நீதானோ அல்லவோ என்றுகூடச் சந்தேகித்தேன்' என்று துக்கமும் சந்தோஷமும் கலந்த முறையில் சொன்னாள். உடனே அவன் அதிக ஆத்திரத்துடன், 'ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்று சொன்னாயே; அது என்ன? யார் நமது விஷயத்தில் சூழ்ச்சி செய்தது' என்று கேட்கவும் அவள், 'இப்போது ஒன்றும் சொல்ல முடியாது. அது பெரிய விஷயம், மேலும் இப்போது அவசரமாக வேறு இடத்துக்கு நான் செல்ல வேண்டியிருக்கிறது. நீ நாளைய தினம் என்இருப்பிடத்துக்கு வா. இனிமேல் இவ்வாறு அடிமத்தனமான வேலை செய்யக்கூடாது. நீ சந்தோஷமாகத்தானே இருக்கிறாய்' என்று கேட்டாள்.

அவன், 'நான் அதிக சந்தோஷத்துடன் இருப்பதாகச் சொல்லமுடியாது. பலவிதமாகவும் என் மனம் குழப்பமடைந்திருக்கிறது. ஆயினும் உன்னைக் கண்ட விஷயத்தில் எனக்கு அதிக சந்தோஷமே. நம்முடைய பிறப்பைப் பற்றிய மர்மம் ஏதேனும் உனக்குத் தெரியுமா?' என்று விசாரித்தான். அவள் 'இல்லையே எனக்கொன்றும் அது சம்பந்தமாகத் தெரியாதே' என்றாள். அப்போது அவன், நான் சிறிது நேரத்துக்கு முன் கப்பற்றித்தான் சிந்தித்

துக்கொண்டிருந்தேன். பத்து வருஷங்களுக்கு முன் நாம் இருவரும் ஒரே தர்ம பாடசாலையில் படித்தோமல்லவா. அப்போது என்னை நகரத்தின் மத்தியிலுள்ள அழகிய சிவப்புகட்டடத்துக்கு அழைத்துப் போனுர்கள் என்று சொன்னேனல்லவா? அது நமது அரசரின் அரண்மனேயே என்று பின்னல் தெரிந்துகொண்டேன். நமக்கு அப்போதெல்லாம் பாதுகாப்பு அளித்து வந்த பிரபு பஞ்சநதம் பிரபுவே என்று இப்போது தெரிந்துகொண்டேன். ஆனல் அவர் அதை மறுக்கிருர். என் படிப்பு சொற்பகாலஞ் சென்று முடிந்த பின்னர் அரண்மனையைச்சேர்ந்த ராணியின்மாளிகையில் என்னை ஒருவேலைக்கு அமர்த்தினர்கள். பிறகு ஏதோ காரணத்தினுல் அங்கிருந்து விலக்கி இந்த ஹேமவதி சீமாட்டியின்வீட்டில் வைத்திருக்கிருர். இப்போதும் இங்கிருந்து என்னை ஏதேனும் சர்க்கார் வேலைக்கே மாற்ற அந்தப் பிரபு முயன்று வருகிருர். நான் இப்போது அவர் வீட்டுக்குச் சென்றிருந்தபோது நாம் நமது தாயாராக இருக்க வேண்டுமென்று நினைத்த அம்மாதின் படத்தைக்கண்டேன். அதில் பெயர் காணப்படவில்லை. அப்படம் அடங்கிய புஸ்தகத்தின்மீதுமட்டும்' அரசசபை அழகிகள்' என்று போட்டிருந்தது. அப்படத்தைப்பெற எவ்வளவோ முயன்றும் முடியவில்லை' என்று தன் நிலைமையைக்கூறி முடித்தான்.

இதையெல்லாம் ஆச்சரியத்துடனும் சந்தோஷத்துடனும் கேட்டுக்கொண்டிருந்த சகோதரி, 'ஆ! என்ன ஆச்சர்யம்; நமது பிறப்பில் ஏதோ ஆச்சர்யமிருக்கிறது. இதை எப்படியாவது கண்டு பிடிக்க வேண்டியதுதான். இருக்கட்டும்; நீ நாளையதினம் என் இருப்பிடத்துக்கு வா. நான் உனக்கு அந்தப் படத்தைக் காண்பிக்கிறேன் பார். இதைக் கேட்டு

ஆச்சர்யப்படவேண்டாம். இதற்கு நான் அந்தப் படமொன்றை எப்படியாவது பெறுவேன் என்பது தான் அர்த்தம். நீ ஒரே முறையாக உன் எஜமானியிடம் இனி வர முடியாது எனச் சொல்லிவிட்டு வந்துவிடு. நாம் குழந்தையா யிருக்கும் போது எங்கு வளர்ந்தோமோ அதே கட்டடத்தில் நான் தங்கியிருப்பதைக் காணலாம். தற்செயலாக அந்த இடம் வாடகைக்கு விடப்படும் என்று போர்ட் போட்டிருந்ததால் அதை நான் அமர்த்திக்கொண்டிருக்கிறேன். நாளையதினம் நீ தவறாமல் அங்கு வா. எல்லாம் விவரமாகப் பேசிக் கொள்ளலாம்' என்று கூறிவிட்டுத் தன் பெயரும் விலாசமு மடங்கிய கார்டைக் கொடுத்தாள். அதைப் பார்த்ததும் மோகன சுந்தரம் அதிக ஆச்சர்யத்துடன், 'ஓ! உனக்குக் கலியாணமாய் விட்டதா; உன் கணவன் எங்கே; யார்,' என்று மிக ஆவலுடன் கேட்டான். அதற்கு அவள், 'நான் அவரிடமிருந்து விலக்கப்பட்டு விட்டேன். அதற்காக நீ கவலையோ, வருத்தமோ அடையவேண்டாம். அவ்வாறு பிரிக்கப்பட்டது என் குற்றமல்ல. அதைப்பற்றி எல்லாம் இப்போது பேசிக்கொண்டிருக்க நேரமில்லை. என்னை மற்றும் ஒருமுறை அணைத்துக் கொள். நாம் உடனே பிரிந்துவிடுவோம். நாளை பகல் இருவரும் ஒன்றுகச் சேர்வோம்,' என்று கூறினள். பிறகு அவர்களிருவரும் பரஸ்பரம் அன்புடன் முத்தமிட்டுக்கொண்டபின் அவர்கள் தங்கிப்பேச இடமளித்த வீட்டுக்காருக்கு வந்தனம் செலுத்திவிட்டுப் பிரிந்து சென்றனர்.

மோகனசுந்தரம் தன் சகோதரியுடன் பேசியபோது தான் இராஜேஸ்வரியைக் காதலிக்கும் சமாசாரத்தைச் சொல்லவில்லை என்பதை வாசகர்கள் கவனித்திருக்கலாம். உலக அனுபவம் இல்லாதவனும், வாலிபனுமான அவன் இப்படிப்பட்ட விஷயத்தைத் தன்னிலும் எழெட்டு வயது பெரி

யவளான சகோதரியிடம் தெரிவிக்க வெட்கப்பட்டிருப்பான் என்பதில் ஆச்சரியமில்லை. இரண்டாவதாக அவர்கள் சந்தித்துப் பேசிய அச்சொற்ப நேரத்தில் இதைச் சொல்லக் கூடிய சாவகாசமும் இருக்கவில்லை. எப்படியிருப்பினும் சகோதரியை விட்டுப் பிரிந்ததும் அவனது மனதில் ராஜேஸ்வரியின் எண்ணந்தான் புகுந்துகொண்டது. தன் சகோதரியை ஆறு வருஷங்களுக்குப் பின்னுல் சந்தித்ததாலும் இனி அவளுடன் இருக்கப்போவதாலும் அவன் அதிக சந்தோஷமடைந்தானென்றுலும் தனது காதலியாகிய ராஜேஸ்வரியை விட்டுப் பிரியவேண்டுமே என்று நினைத்த மாத்திரத்தில் அவன் அளவிலா·துக்கமடைந்தான். அவன் அவளிடம்வைத்திருந்த காதல் சாதாரணமானதல்ல. அவளுடைய அழகையும் யௌவனத்தையும் கண்டு மட்டும் அவன் அவளை மோகிக்கவில்லை. தான் ஒருசேவகன் என்பதை அறிந்தும் அவள் அதையும் கவனியாமல் தன்மீது காதல்கொண்டு தான் ஒரு சேவகன் என்னும் எண்ணமே அவனுக்கு இல்லாதபடி பல வித சௌகரியங்களையும் அளித்துத் தக்க விதத்தில் ஆறுதலும்கூறி வந்ததுடன், தன்னுடைய பிறப்பிலும் ஏதோ மர்மமிருக்க வேண்டுமென்பதை உணர்ந்து அவ்விஷயத்திலும் அதிக அனுதாபம் பாராட்டியதால் அவளிடம் மனப்பூர்வமான விசுவாசத்துடனும் அன்புடனும் இருந்தான். ஆகவே அப்படிப்பட்டவளை விட்டுப் பிரிவதென்றுல் மனம் எளிதில் இடங்கொடுக்குமா? இவ்வாறு சிந்தித்துக்கொண்டே அவன் ஹேமவதி சீமாட்டியின் மாளிகையை அடைந்தான். அங்கு வந்து சேர்ந்தபின்னர்தான், பஞ்சநதம் பிரபுவினிடமிருந்து எத்தகைய பதிலும் வாங்கிவரவில்லை யென்னும் ஞாபகம் அவனுக்கு வந்தது. சீமாட்டியிடம் என்ன பதில் சொல்வது என்று அறியாமல் சிறிது நேரம் யோசித்தான். திரும்பி வந்ததே அவளுக்குத் தெரியப்படுத்த வேண்டாம் என்று நினைத்

தான். ஆனால் உடனே ஒரு சேவகன் அவனிடம், 'ஐயா, நீ திரும்பிவந்ததும் உன்னை உடனே மாடிக்கு அனுப்பும்படி எஜமானி கட்டளை இட்டிருக்கிறார்,' என்று தெரிவித்தான்.

ஆகவே மோகனம் மாடிக்குச் சென்று எஜமானியின் எதிரில் நின்றான். அவள் அவனைப் பார்த்த பார்வையிலிருந்தே அவள் ராஜேஸ்வரியுடன் தனக்குள்ள சம்பந்தத்தை அறிந்துகொண்டிருக்கவேண்டுமென்று கருதி என்ன நடக்கப் போகிறதோ என்று அஞ்சினான். சீமாட்டி அவனைப் பார்த்து, 'பிரபுவினிடத்திலிருந்து நீ ஏதேனும் பதிலை யாவது சமாசாரத்தையாவது கொண்டுவந்திருக்கிறாயா?' என்று கேட்டாள். அவன் ஒன்றும் கொண்டுவரவில்லையென்று தெரிவிக்கவும் சீமாட்டி, 'அப்படியானால் திரும்பி வர இவ்வளவு நேரமென்ன? பிரபு உன்னை அநாவசியமாக நீண்ட நேரம் காக்க வைத்திருக்கமாட்டார் என்று நினைக்கிறேன்' என்றாள். அப்போது மோகனம், 'என்னுடன் அவர் பேசிக்கொண்டிருந்தபோது பிரபுவைக்காண நாகலாபுரம் ஜமீன்தார் வந்துவிட்டபடியால் என்னை அவர் சொற்ப நேரம் தாமதப் படுத்தினார்' என்று தெரிவிக்கவும் அவள், 'அப்படி இருந்தாலும் நீ போய் மூன்றுமணி நேரமாகிறதே. அவ்வளவு நேரமா அந்த ஜமீன்தார் பேசிக்கொண்டிருந்தார் அதிருக்கட்டும். பஞ்சநதம் பிரபு நீ அனாதையாக இருக்கிறாயே என்பதற்காக உன்னிடம் அதிக அக்கரையுடன் இருக்கிறாராதலால் உன்னுடன் ஏதேனும் பேசியிருப்பாரே? என்ன சொன்னார்?' என்று கேட்டாள். அவன், 'அம்மா! அவர் எனக்கு சர்க்கார் காரியாலயத்தில் நல்ல வேலையொன்றைப் பார்த்துக் கொடுப்பதாகச் சொன்னார்' என்று கூறி முடிக்கு முன் ஹேமவதி, 'அதை நீ ஒப்புக்கொண்டிருப்பாயென்றே நம்புகிறேன். உன் நன்மைக்குத்தானே

அவர் அதை செய்யப் போகிறார். அதை நீ மறக்கலாமா? மேலும் உயர்ந்த அந்தஸ்திலுள்ள அவர் கூறுவதை நீ ஒரு கட்டளையாக அல்லவோ மதிக்கவேண்டும். நீ அவரிடம் ஒப்புக்கொள்ள வில்லையென்றால் உடனே போய் ஒப்புக் கொள்வதாகத் தெரிவித்து விட்டு வா,' என்று பரபரப்புடன் பல விஷயங்களைச் சொன்னாள். அப்போது அவன் நிதான மாக, 'அம்மணி! நான் எதையும் ஒப்புக்கொள்ளு முன் இதைப்பற்றி ஒருவருடன் கலந்து ஆலோசிக்கவேண்டியிருக் கிறது. பஞ்சநதம் பிரபு என்பால் கொண்டுள்ள விசுவாசத் துக்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். இதை உடனே ஒப்புக்கொள்ளாததாலேயே நான் அவரை அவமதித்ததா காது,' என்று சொன்னான்.

அவன் ஒருவருடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்று கூறியது தன் குமாரியாகிய ராஜேஸ்வரியுடன் தான் என்று அவள் நினைத்துக்கொண்டு அதிக கோபமடைந்து சிவந்த முகத்துடன், 'அடே! நீ யாருடன் கலந்தாலோசிக்க வேண்டுமென்கிறாய். உடனே சொல்' என்று ஆத்திரத் துடன் கேட்டாள். அதற்கு அவன், 'சீமாட்டியே! நான் சில வருஷங்களாகக் காணாதிருந்த என் சகோ தரியை இன்று தற்செயலாகச் சந்தித்தேன், என்று சொல்லி முடிப்பதற்குள் அவள், 'உன் சகோதரியா? உனக்கு பந்துக்கள் இருப்பதாக எனக்கு இதுவரையிலும் தெரியாதே இதென்ன ஆச்சர்யம்,' என்றாள். அவன், 'ஆம்; எனக்கு ஒரு சகோதரி இருக்கிறாள். அவளை வழியில் சந்தித்ததால் தான் திரும்பிவர இவ்வளவு நேரமாயிற்று. இதுதான் உண்மை. அவள் நான் இந்த வேலையை விட்டு விட்டுத் தன்னிடம் நாளையே வந்து விடவேண்டுமென்று கூறியிருக்கிறாள்,' என்று தெரிவித்தான். அப்போது அவள், 'ஓ, அப்படியானால் உன்

சகோதரி என்பது யார்; அவள் எங்கு இருக்கிறாள்' என்று கேட்டாள். அவன் தன்னிடமுள்ள தன் சகோதரியின் பெயரும் விலாசமும் அடங்கிய கார்டைக் காண்பிப்பதால் எத்தகைய அபவாதமும் ஏற்படாதென்னும் எண்ணத்துடன் அதைச் சிமாட்டியினிடம் கொடுத்தான். அதைச் சிமாட்டி பார்த்ததும் ஆச்சர்யப் பட்டதுடன், வெறுப்பு, பரிகாசம், வெற்றி முதலிய குறிகளைக் காட்டக் கூடிய முகத்துடன் சிரித்துக் கொண்டே 'தம்பி, இவள் தான் உன் சகோதரியாயின், இவளைத்தான் நீ உன்வேலையை ஒப்புக்கொள்ளுமுன் கலந்தாலோசிக்க வேண்டுமாயின் இவள் யார் தெரியுமா? இவள் ஆடவன் வேடம் தாங்கிக் கொள்ளையடிக்கும் மாது அல்லவா?' என்று கூறினாள்.

இதைக் கேட்டதும் மோகனம் ஆச்சர்யமும் துக்கமும் அடைந்தானென்றாலும் மறு நிமிஷமே சமாளித்துக் கொண்டு, 'சிமாட்டியே! நீங்கள் கூறுவது தவறு. வேறு யாரைப் பற்றியோ நீங்கள் சொல்வதாக இருக்கலாம், என்றான். அச்சமயத்தில் ஒரு சேவகன் அங்கேவந்து அக்குடும்ப கார்டியன்களில் ஒருவரும் வக்கீலுமான மனமோகனர் வந்திருப்பதாகத் தெரிவித்தான். அப்போது மோகன சுந்தரம் அங்கிருந்து வெளியேபோக முயன்றான். ஆனால் சிமாட்டி அவனை அங்கேயே இருக்கும்படி சொல்லி இதற்குள் அவ்வறையில் நுழைந்த மனமோகனரைப் பார்த்து, 'ஐயா, இதோ பாரும். இந்தக் கார்டிலுள்ள இப்பெயரும், விலாசமுடைய பெண்தானே மனித வேடந் தாங்கி அன்று உங்களை வழிமடக்கிக் கொள்ளையடித்தது,' என்று அக்கார்டைக் காட்டிக் கேட்டாள். அவர், 'ஆம்: சந்திராபாய்தானே. இவள் தான் எங்களை வழிமடக்கிக் கொள்ளையடித்தது. ஆஹா! இவள் என்ன சாமர்த்தியக்காரி. என்னைக் கடற்

கரைப் பட்டணத்தில் ஏமாற்றி வழக்கிலும் ஜெயித்து விட்டாளே' என்று ஆச்சர்யப் பட்டார். அப்போது ஹேமவதி மோகனத்தைக் காண்பித்து, 'இவன் அம்மாதினுடைய சகோதரனும்' என்று பரிகாசம் செய்தபோது அவன் ஆத்திரம் பொறுக்க முடியாமல் சிமாட்டியின் கையிலிருந்த அக் கார்டைப் பிடுங்கிப் போட்டான். அதைக் கண்ட மனமோகனர், அவனைப் பார்த்து, 'தம்பி! என்னைக் கொள்ளை யடித்தது அவளே என்று கோர்ட்டில் ருஜுப்படுத்த என்னால் முடியவில்லையென்றாலும் அவள்தான் என்று நிச்சயமாக இப்போதும் கூறுவேன். நீ மரியாதையும் அடக்கமும் உடையவன் என்று நான் நினைத்திருந்தேன். இப்போது நீ முரட்டுத்தனமாகவும் மரியாதைக் குறைவாகவும் நடந்து கொண்டது வருந்தத் தக்கது' என்று கூறினர்.

இதையெல்லாம் கேட்ட மோகனசுந்தரம் சந்தோஷப் பட முடியாமலும் துக்கப்பட முடியாமலும் பலவாருக வருந்திக்கொண் டிருந்தபோது சிமாட்டி அவனைப் பார்த்து, 'மோகனம்! இப்படிப்பட்ட சம்பந்த முடைய உன்னை இனி ஒரு நிமிஷம்கூட என் மாளிகையில் வைத்துக்கொள்ள முடியாது, நீ உடனே இந்த இடத்தை விட்டுப் போக வேண்டும். காரணம் யாருக்கும் தெரியவேண்டு மென்னும் அவசியமில்லை. நீ வேறு எந்த அறைக்கும் செல்லாமலும் உன் உடையையும் மாற்றிக்கொள்ளாமலும் இப்படியே நேராக வெளியே போய்விடு. உன் ஆடைகளை யெல்லாம் நான் ஒரு ஆள் மூலம் நாளைய தினம் உன் சகோதரியின் விலாசத்துக்கு அனுப்புகிறேன். உடனே இக்கட்டளைக் குப் பணிந்து செல். இல்லா விட்டால் உன் சமாசாரத்தை வீட்டில் எல்லாரிடமும் சொல்லிவிடுவேன்' என்று கட்டளையிட்டாள். மோகன சுந்தரம் திடுகிட்டுப் போனன். என்ன

செய்வதென்று தோன்றவில்லை. எதிர்த்துக் கொண்டிருப்பதில் பயனில்லையென்பதை அறிந்தான். ஆகவே கட்டளைப்படி நடப்பதே சரியென முடிவு செய்துகொண்டு அவ்வறையினின்றும் புறப்பட்டு வெளியே வந்தான். அங்கு ஓரிடத்தில் ராஜேஸ்வரி நின்றுகொண்டிருந்தாள். அவள் மோகன சுந்தரத்தின் முக வாட்டத்தைக்கண்டு திடுக்கிட்டு அவனது கையைப் பிடித்துக்கொண்டு, 'எனதன்புள்ள சுந்தரம்! என்ன சமாசாரம்? என்ன நேர்ந்தது' என்று கேட்டாள். அவன் ஒன்றும் பதில் சொல்லாமல் அவள் முகத்தைப் பரிவுடன் பார்த்துவிட்டுக் கண்ணீர் சொரிந்த வண்ணம் அவளது பிடியினின்றும் விடுவித்துக்கொண்டு அக்கட்டடத்தை விட்டு வெளியேறினன்.

அவன் அவ்வாறு சென்றதைக்கண்ட ராஜேஸ்வரி அதிக துக்கத்துடனும் பிரமிப்புடனும் நின்ற இடத்திலேயே பதுமைபோல் அப்படியும் இப்படியும் அசையாமல் சொற்ப நேரம் நின்று, 'ஆ! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது. நமது தாயார்தான் என்னை விட்டு அவனைப் பிரிக்க ஏதோ ஏற்பாடு செய்திருக்கிருள். அவள் பாவம்! அவனை மிரட்டியோ அல்லது பணம் கொடுத்தோ பிரித்து அனுப்பிவிட்டிருக்கிருள்' என்று நினைத்துத் தன் தாயையே போய்ப் பார்ப்பதென்னும் எண்ணத்துடன் அவள் இருந்த அறைக்குள் சென்றுள். ஆனல் அங்கே மனமோகனரும் தன் தாயாரும் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்து, 'ஆ! தெரியாமல் வந்துவிட்டேன். நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருப்பது எனக்குத் தெரியாது. மன்னியுங்கள்' என்று சொல்லிவிட்டு வெளியே போய்விட்டாள். ஆனல் ஹேமவதி சீமாட்டியும் உடனே மோகனரிடம் அனுமதி பெற்று சொற்ப நேரத்தில் வருவதாகச் சொல்லிவிட்டு வெளியே வந்து தன் குமாரியின்

கையைப் பிடித்துக் கொண்டு பக்கத்திலிருந்த மற்றொரு அறைக்கு அழைத்துச் சென்று, 'மகளே! நீ என்னுடன் ஏதோ பேச வந்தாய் போலிருக்கிறது. அதை நான் தெரிந்து கொண்டு விட்டேன். மோகன சுந்தரம் கவலையுடன் இம் மாளிகையை விட்டு ஒரேயடியாகப் போய்விட்டானே. அது சம்பந்தமாகத்தானே பேசவேண்டும்' என்றதும், அப்பெண், 'ஆ, ஒரேயடியாகப் போய்விட்டானா? அப்படியானால் நானும் அவன் பின்னால் போய்விட வேண்டியதுதான்' என்று கூறிக் கொண்டே அறையின் கதவை நோக்கி வர, சீமாட்டி நீயும் போய்விடுவதாயின் அது உன் இஷ்டம். ஆனால் அவன் ஏன் போனான் என்பதை முதலில் தெரிந்து கொள்வது நல்லது' என்றாள். அப்போது அப்பெண் ஆக்ரோதத்துடன், 'நீ ஒன்றும் காரணம் சொல்ல வேண்டியதில்லை. உன் சமாசாரம் எனக்குத் தெரியாதா ? உனக்கு ஒரு காரியம் ஆகவேண்டுமென்றால் அதைச் சாதித்துக் கொள்வதற்காக நீ எதையும் செய்வாய். மோகனசுந்தரம் விஷயத்தில் நீ என்ன செய்தாய் என்பது எனக்குத் தெரியாவிட்டாலும் நீ ஏதோ செய்து அவனைப் பயப்படுத்தி அனுப்பிவிட்டாய் என்பது மட்டும் நிச்சயமாக எனக்குத் தெரியும்' என்றாள்.

அப்போது சீமாட்டி, 'இல்லை, இல்லை; நான் ஒன்றும் செய்யவில்லை. அவனுடைய நிலவரமே அவன் பயப்படும்படி செய்துவிட்டது. மோகனம் இன்றுபகல் தன் சகோதரியைச் சந்தித்தானாம். அச்சகோதரி யாரென்றால் சில தினங்களுக்கு முன் நமது வக்கீல்மாரை வழி மடக்கிக் கொள்ளையடித்த பெண்பாலாகிய சந்திராபாயே. அவளைப்பற்றியும் நீ அப்போது ஆச்சரியப்பட்டாயே' என்று கூறியதைக்கேட்ட ராஜேஸ்வரி அதிக பீதியுடன் கவலைப்பட்டாளென்றாலும் மறு நிமிஷமே

சமாளித்துக்கொண்டு, 'தாயே! இதுவும் உன் கற்பனையாக இருக்குமென்று நம்புகிறேன்' என்றுசொன்னதும் சீமாட்டி 'அது என் கற்பனையல்ல. அவனே அவளுடைய பெயரும் விலாசமும் அடங்கிய கார்டு ஒன்று என்னிடம்கொடுத்தான். இதோ பார். இதுதான் அது. இதில் சந்திராபாய் என்னும் பெயர் இருக்கிறது பார். அவளது இருப்பிடமும் முன்பு அவள் நமது வக்கீல்மாரை ஏமாற்றி அழைத்துக்கொண்டு போய்த் தான் ஜன்னல்வழியாக ஓடிப்போன இடமேயாகும். இப்போதாவது அவனுடைய சகோதரி எப்படிப்பட்டவள் என்பதைத் தெரிந்துகொண்டாயா? இன்னும் சந்தேகமிருந்தால் அடுத்த அறைக்குப்போய் மனமோகனனையே கேள்' என்று உண்மை நிலைமையைத் தெரிவித்தாள். தாயார் ஆதாரத்துடன் ருஜூப் படுத்துகிறபடியால் மனமோகனைக் கேட்கவேண்டிய அவசியமில்லை யென்று தெரிந்துக்கொண்டாள். எனினும் தான் தோல்வியடைந்ததாக இருக்கக்கூடாதென்னும் எண்ணத்துடன், 'தாயே! அப்படித்தான் அவன் சகோதரி சந்திராபாயே என்று வைத்துக் கொள்வோம். அவள் கெட்டவளாக இருக்கலாம். மோகனசுந்தரம் மட்டும் இனிய குணத்துடனேயே நடந்து கொண்டான்,' என்று சொன்னாள்.

அப்போது சீமாட்டி பரிகாசமாகச் சிரித்துக்கொண்டே, 'நீ கொள்ளைக்காரியின் சகோதரனை உன் காதலனாக ஏற்றுக் கொள்வதாக இருந்தால் சரிதான். அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் அப்படிப்பட்ட யோக்கியதை யுடைய ஒருவனை நான் என் மாளிகையில் வைத்துக்கொள்ள முடியாது. அவள் தன் சாமர்த்தியத்தையும் செல்வாக்கையும் உபயோகித்துத் தம்பியைத் தன் வசமாக்கிக்கொண்டு நமது மாளிகையினின்றும் கொள்ளையடிக்கவும், ஏன்! நம்மைக்

கொலைசெய்யவும் முயற்சிசெய்யக் கூடும்' என்று இன்னும் ஏதோ விவரமாகச் சொல்லப்போனுள். அச்சமயம் அப் பெண், 'தாயே! போதும் நிறுத்து. எப்படியோ நீ வெற்றி பெற்று விட்டாய். என் காதலனை என்னை விட்டுப் பிரித்து விட்டாய். இப்போது உனக்கே ஜெயமென்று வைத்துக் கொள்வோம். ஆயினும் இவ்வாறு நான் உன்மீது வெற்றி கொள்ளக்கூடிய சமயம் வாராமற் போகாது' என்று சிறிது பணிவுடன் கூறினுள். இவ்வாறு கூறி முடிந்ததும் அப் பெண் அதிக ஆத்திரத்துடனும் கவலையுடனும் வெளியே போய்விட்டாள். அவள் போன பின்னர் சீமாட்டி தான் வெற்றி பெற்றதாகவும் தன் மகளையும் அவளது காதலனை யும் நிரந்தரமாகப் பிரித்து விட்டதாகவும், 'அவள் என்ன தான் கோபித்துக்கொண்ட போதிலும் தன்னை ஒன்றும் செய்ய முடியாதென்றும் நினைத்துக்கொண்டு விட்டு மன மோகனர் இருந்த அறைக்குச் சென்று அவருடன் ஆக வேண்டிய காரியங்களைக் கவனித்தாள்.

---

## 49-வது அத்தியாயம்

---

### சமர்த்தரும் ஏமாந்தார்

மோகன சுந்தரத்தின் சகோதரி நமது பிரசித்தி பெற்ற கொள்ளைக்காரியான இந்திரா பாயே என்பதை வாசகர்கள் உணர்ந்திருக்கலாம். தன் சகோதரனை விட்டுப் பிரிந்த அவள் நேராகத் தன் சொந் வேலையைக் கவனிக்கச் செல்லாமல் மோகனம் சொ

பஞ்சநதம் பிரபுவின் வீட்டுக்குச் சென்று அந்தப் படத்தைப் பார்க்க வேண்டுமென்னும் எண்ணத்துடன் அங்குச் சென்று பிரபுவும் வீட்டில் இருக்கிறார் என்பதை அறிந்து சந்தோஷப்பட்டாள். சேவகனிடம் தன் பெயர் என்ன என்று சொல்வதென நினைத்துத் தான் அவருக்குப் புதிய வளாகையால் பெயர் சொல்வதால் பிரயோசனமில்லை யென்றும், புதிய மாது ஒருத்தி வந்திருப்பதாகவும் பிரபுவினிடம் சொல்லும்படி கூறினாள். சேவகன், தன் எஜமானர் அதிக ஜாக்கிரதையும் முன் யோசனையும் உடையவராதலால் பெயர் சொல்லாத ஒருத்தியை அவர் வரவேற்க மாட்டார் என்று நினைத்தானென்றாலும் தன் எதிரில் நின்றிருந்த அப்பெண் ரூபலாவண்ய முடையவளாயும் நல்ல அந்தஸ்துடையவள் போல் உடை அணிந்திருந்ததாலும், எப்படியாவது ஆகட்டுமென்று சொல்லித் தைரியத்துடன் அவளை அவ் வீட்டின் மாளிகையிலுள்ள அறைக்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்த பிரபு அம் மாதைக் கண்டதும், தான் செய்வது இன்னதென்று தெரியாமல் தன் ஆசனத்தினின்றும் எழுந்து அவளை ஒரு விதமாகப் பார்த்துவிட்டு எதிரிலிருந்த ஆசனத்தில் உட்காரச் சொல்லும் ஜாடையாக அதைக் காண்பித்தார். அவள் பெயர் இன்னதென்று தெரியாதலால் யாரோ என்னமோ, எதற்காக வந்தாளோ என்னும் தகவல் தெரியாமல் அவர் குழப்பத்துடன் அவளைப் பார்த்தார். அப்போது இந்திராபாய், 'ஐயா! நான் பேசுவது பஞ்சநதம் பிரபுவுடன்தானே என்பது முதலில் எனக்குத் தெரிய வேண்டும்' என்று கேட்டாள். அதற்கு அவர், 'மாதே! நீ யார் என்றே எனக்கு முதலில் தெரியவில்லை. எனக்கு முன்பின் தெரியாதவர்களுடன் நான் பேசும்போது ஜாக்கிரதையாகத்தான் இருப்பது வழக்கம்,' என்று சொன்னார்.

அப்போதும் அவள் தன் பெயரைச் சொல்லாமல் மிகச் சாமர்த்தியமாக, 'ஐயா, நான் பஞ்சநதம் பிரபுவுடன் தான் பேசுகிறேன் என்பதைத் தெரிந்து கொண்டு விட்டேன். ஏனெனின் அவர் எப்போதுமே எந்த விஷயத்திலும் முன் ஜாக்கிரதையுடனும் சாமர்த்தியமாகவும் நடப்பதில் பெயர் பெற்றவர் என்பது எனக்குத் தெரியும். அவரது திறமைமையைப்பற்றிப் பல கோர்ட்டுகளிலும் பேசிக்கொள்வதை நான் கேட்டிருக்கிறேன்,' என்று அவரைப் புகழ்ந்து பேசி அவரைப் பார்த்துப் புன் சிரிப்பு சிரித்து அவர் மீது தன் மாய வலையை வீசினுள். அது வரை நின்றுகொண் டிருந்த அவர் தனது சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டே, 'மாதே! நீ என்னை இவ்வாறு புகழ்வதை எப்படி நான் வரவேற்பது என்பதே எனக்குத் தெரியாது. வரவேற்பதாகவே வைத்துக் கொண்டாலும் எவ்விதம் அதற்குப் பதில் அளிப்பது என்பதும் எனக்குத் தெரியாது. ஒரு விதமாகப் பதில் அளித்து விட்டாலும் மேற்கொண்டு என்ன பேசவேண்டி யிருக்குமோ தெரியவில்லை. எது எப்படியாயினும் நீ உன் பெயரைச் சொல்ல மறந்து விட்டாய் என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறேன்' என்றார். அப்போதும் அவள் தன் பெயரைச் சொல்லாமல் அவரைப் பலவிதமாகப் புகழ்வதிலும், ஒரு நோக்கமும் இல்லாதவள் போல் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவதிலும் காலங் கழித்தாள். கடைசியாக அவள், 'ஐயா, நான் சில வருஷங்களுக்கு முன் பரிதிபுரம் சென்றிருந்தபோது அங்குள்ள பெரிய மனிதர்கள் கூட உங்களுடைய பெயரையே சொல்லிப் பாராட்டினுர்கள். ஆகவே நான் இப்போது உங்களைப் பாராட்ட வேண்டியதுதான். நீங்கள் அதைக் கேட்டுக் கொண்டிருக்க வேண்டியதுதான்,' என்று இன்னும் ஏதோ பேச முயன்றபோது அவள் பைத்தியக்காரியாக இருக்கலா

மென நினைத்து 'நான் எவ்வளவு தரம் உன் பெயரைச் சொல்லும்படி கேட்டாலும் அதைச் சொல்லாமல் வேறு எதையோ பேசுகிறாய், நீ என்ன வேலையாக இங்கு வந்தாய் என்பதை எனது மனைவியிடமேனும் சொல்வாயா?' என்று கேட்டார்.

அப்போதுதான் அவர் தன்னுடைய கருத்தை அறிந்ததற்காகச் சந்தோஷப் படுபவள்போல் பாவனை செய்து, 'ஆம், அதைத்தான் நான் விரும்பினேன். முன்னமே சொன்னேன்,' என்றாள். அதனால் சிறிது கவலை தீர்ந்தவர் போல் அப் பெரியவர் தான் தன் மனைவியை அழைத்துக் கொண்டு வருவதாகவும், அதுவரை அவள் அங்கேயே இருக்கலாமென்றும் கூறிவிட்டுப்புறப்பட்டவர் அவ்வறையின் கதவினருகில் சென்றதும் மற்றொரு முறை அவளது பெயரைக் கேட்டுப் பார்ப்போமென்று, 'மாதே! என் மனைவியிடம் இன்ன பெயரைக் கொண்டமாது வந்திருக்கிறாள் என்று சொல்வதற்காக உன் பெயரைச் சொல்வாயா?' என்று கேட்டார். அப்போதும் அவள், 'நீங்கள் கேட்ட கேள்வி சரியானதே, நீங்கள் திரும்பி வரும்போது, உங்கள் மனைவியையும் அழைத்துக்கொண்டு வரும்போது, நீங்கள் இருவருமாகச் சேர்ந்து வரும்போது, உங்களைக் கண்டு நான் சந்தோஷப்படும்போது' என்று இன்னும் ஏதோ பேச முயன்றபோது அவளிடமிருந்து சரியான பதிலைப்பெற முடியாதென்று தெரிந்துகொண்ட பிரபு, 'ஓ, சரியே' என்று சொல்லிக்கொண்டே அவ்வறையை விட்டுப் போய் விட்டார்.

அவர் அவ்வறையின் கதவைச் சாத்திக்கொண்டு சென்ற மறு நிமிஷமே இந்திராபாய் எதிரிலிருந்த மேஜை மீது ஒரே பாய்ச்சலாய்ப் பாய்ந்து அங்கிருந்த பல படங்க

ளடங்கிய புஸ்தகத்தை யெடுத்துப் பக்கங்களை அவசரமாகத் திருப்பிக்கொண்டே வந்தாள். பெயர் போடாமல் படம் என்று மட்டும் குறிப்பிடப் பட்டிருந்த, தன் சகோதரன் பார்த்ததாகச் சொன்ன, அப்படத்தைப்பார்த்ததும் இந்திரா பாய் அளவிலா சந்தோஷமடைந்தாள். அதையே சொற்ப நேரம் உற்றுப் பார்த்தாள். உடனே அவள் அப் படத்தைக் கிழித்துக்கொண்டு பக்குவமாகச் சுருட்டித் தன் உடையில் வைத்து மறைத்துக் கொண்டு முன்பு இருந்தபடியே அப் புஸ்தகத்தை வைத்து விட்டுத் தான் தன்னுடைய ஆசனத்தில் வந்து அமர்ந்து ஒன்றும் தெரியாதவள் போலும், பஞ்சநதம் பிபுவையும் அவரது மனைவியையும் மிக ஆவலுடன் எதிர் பார்ப்பவள் போலும் உட்கார்ந்திருந்தாள். அந்தச் சமயத்தில் அப்பிரபு தம்பதிகள் அங்கே வந்தனர். அச் சீமாட்டி உயரமாகவும் மெல்லிய தேகத்துடனும் வயதானவளாயும் காணப்பட்டாள். அவள் சற்றுநேரம் இமை கொட்டாமல் இந்திராபாயைப் பார்த்தாள். ஆயினும் அவள் யார் என்று தெரியவில்லை. இந்திராபாயும் அச் சீமாட்டியைச் சிறிது நேரம் பார்த்துவிட்டு ஏதோ ஏமாற்றமும் அதிருப்தியும் அடைந்தவள் போல் முகஜாடை வைத்துக் கொண்டு பிரபுவைப் பார்த்து, 'பிரபுவே! இம்மாதுதான் உமது மனைவியோ?' என்று கேட்டாள்.

இக்கேள்வியைக் கேட்டதும் ஆச்சர்யமடைந்த அவர், 'இம்மாதிரி கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல என்னால் முடியாது. இவள்தான் என் மனைவி என்பதற்கு என்ன சந்தேக மிருக்கிறது. உன்னோடு இனி பேசுவது கஷ்டம்' என்றார். அப்போது இந்திராபாய், 'இச்சீமாட்டி உமது மனைவியாயிருப்பினும்சரி, நான் எதிர்பார்த்துவந்தது இச்சீமாட்டியல்ல. என்னைப் பரிதிபுரத்தில் சந்தித்து இங்கு வந்தால் தன்

வீட்டுக்கு வரும்படி கேட்டமாது இவர் அல்ல. இதில் ஏதோ தவறு இருக்கிறது. அம்மாது தெரிவித்த அவாது கணவன் பெயர் எனக்கு மறந்துபோய் இருக்கலாம். எப்படியாயினும் சரி, நான் உங்களுக்கு இவ்வளவு நேரம் அநாவசியமாய்த் தொந்திரவு கொடுத்ததற்காக மன்னிக்கவேண்டும்' என்று கூறிக்கொண்டே அவ்வறையை விட்டுப் புறப்பட்டு விட்டாள். பிரபுவும் அவாது மனைவியும் தாங்கள் நின்ற இடத்திலேயே நின்றுகொண்டு ஆச்சர்யத்துடனும் கவலையுடனும் அவள் போவதைப் பார்த்துக் கொண்டே இருந்தனர். இந்திராபாய் போன பிறகு மனைவியும் கணவனும் சொற்ப நேரம் தாங்கள் ஏமாந்து போன விஷயத்தைப் பற்றியே பேசிக்கொண் டிருந்தனர். கணவன் ஏமாந்ததுடன் மனைவியையும் ஏன் அழைத்துக்கொண்டுவாவேண்டுமென்று மனைவி கேட்டு சண்டை போட்டாள். இவ்வாறாகத் தம்பதிகள் இருவரும் சொற்பநேரம் வரை சண்டை போட்டுக் கொண்டிருந்தனர்.

அப்பிரபுவின் வீட்டை விட்டுப் புறப்பட்ட இந்திராபாய், மிகச் சமர்த்தரென்றும், எதையும் ஜாக்கிரதையாகவும் அளவாகவும் செய்பவர் என்றும் சிலாக்கிக்கப் படுகிற பஞ்சகதம் பிரபுவை ஏமாற்றித் தான் நினைத்த காரியமாகிய அப்படத்தை எடுத்துக்கொள்வதைச் சாதித்து விட்டதைப் பற்றி அளவிலா சந்தோஷமடைந்தவளாய்த் தன் சகோதாவிடம் தான் என்ன அவசா காரியமாகப் போகவேண்டுமென்று தெரிவித்தாளோ அவ் வேலையாகப் புறப்பட்டாள். தான் புறப்பட்ட இடத்திலிருந்து வெகு தூரத்திலுள்ள ஒரு வக்கீலின் காரியாலயம் சென்றாள். அப்போது நேரம் அதிகமாகி விட்டதால் அவர் அங்கு இருக்கமாட்டார். என்று நினைத்தாள். ஆயினும் விசாரித்து விடுவது நல்ல

தெனக் கருதி அக்காரியாலயத்தில் புகுந்து வக்கீல் உட்கார்ந்திருக்கும் பிரத்யேக அறையின் வாயிலில் நின்று தான் உள்ளே வரலாமா என்று கேட்டாள். உள்ளே இருந்த வக்கீல் அவள் வரலாம் என்று தெரிவிக்கவே அறையில் நுழைந்து ஒரு ஆசனத்தில் அமர்ந்தாள்.

அந்த வக்கீல் சூரியபிரகாசம் என்பவர் நரைமயிரையுடைய வயோதிகர். உயர்ந்த மெல்லிய தேக முடையவர் பணப்பேய்க்கு இரையானவர். அவர் எப்போதும் பேசுவதும் நினைப்பதும் பணத்தைப்பற்றியே. அவர் இந்திராபாயை மிக்க மேதை மரியாதையுடன் வரவேற்றார். அவள், 'ஐயா! இந்த நேரத்தில் நீர் இங்கு இருப்பீர் என்று நான் நினைக்கவே இல்லை. ஐந்து மணிக்கு மேலும் இங்கு இருக்கிறீர்கள். பணம் வருமென்றால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் வேலை செய்வீர்கள் போலிருக்கிறது. பணம் சேகரிப்பதில் இப்போது நாட்டம் சென்றிருக்கிறது' என்று கூறிச் சிரித்தாள், அவர் அதைக் கேட்டு சந்தோஷப் பட்டவர் போல், 'நீங்கள் வேடிக்கையாகப் பேசினாலும் அது உண்மைதான். நீங்களும் இப்போது உங்களுடைய பணத்துக்காகவே வந்திருப்பதாகத் தெரிகிறது' என்றதும் அவளும், 'ஆமாம்; அதற்குத்தான் வந்தேன். அது என்ன சிறு தொகைதானே; நான் கையெழுத்து போடுவதற்கு ரசீது எழுதி வைத்திருக்கிறீர்களா?' என்று கேட்டாள். அதற்கு அவர், 'ஆஹா, வைத்திருக்கிறேன். நேற்று அல்லது இன்றைக்குள் நீங்கள் இங்கு வருவீர் என்பது எனக்குத் தெரிந்துதான் எழுதிவைத்தேன். பணம் இருக்கிறதா பார்க்கிறேன்' என்று சொல்லிக் கொண்டே தன் மேஜையைத்திறந்து நூறுபவுன் பெறுமான நோட்டுகளை எண்ணி அவளிடம் கொடுத்தார். அவளும்

அது சரியாக இருக்கிறதா என்றும் பார்க்காமல் தன் சட்டைப் பையில் மடித்து வைத்துக் கொண்டாள். அவர் கொடுத்த பேனாவைக்கொண்டு அவள் ரசிதில் கையெழுத்திட்டாள். அதில் சந்திராபாய் என்று பெயர் போடவில்லை பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுடைய பெயரைப்போல் நல்ல கௌரவமான பெயரைப் போட்டுக்கொடுத்தாள்.

பிறகு அவள் அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வாடகைவண்டியில் ஏறி நகருக்கு அப்பால் உள்ள சிறிய மாளிகை வீடாகிய தனது இல்லம் சேர்ந்தாள். அவளது வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அவளது அந்தரங்க வேலைக்காரியாகிய புஷ்பவல்லி அவளை வரவேற்றாள். உடனே அவள், தன் வீட்டில் ஒரு நோயாளி படுத்திருந்த அறைக்குச் சென்றாள். போகும் வழியில் புஷ்பவல்லி தன் எஜமானியிடம், 'அவருக்கு இப்போது கொஞ்சம் சுமாராக இருக்கிறது. டாக்டர் இப்போதுதான் வந்துபோனார். இன்னும் சில தினங்களுக்குள் அவர் சொஸ்தமடைந்து விடுவார் என்று டாக்டர் சொன்னார்' என்று தெரிவித்தாள். உடனே இந்திராபாய், 'அவர் தன் ஸ்மரணை பெற்று வருகிறாரா? ஏதேனும் பேசினாரா?' என்று கேட்டாள். அதற்குப் புஷ்பவல்லி, 'ஆம் அவர் தான் எங்கேயிருக்கிறேன்' என்று கேட்டார். நான் ஒரு நண்பர் வீட்டில் அவர் இருப்பதாகத் தெரியப்படுத்தினேன். உடனே ஒன்றும் பேசாமல் கண்ணை மூடிக்கொண்டார். பிறகு சிறிது நேரம் பொறுத்து அவர், தன்னைத் தினசரி இரண்டு மூன்று முறை வந்து பார்க்கும் அன்பும் அழகும் பொருந்திய மாது யார் என்றுகேட்டார். நான் அம்மாதின் பெயர் சந்திராபாய் என்றும் அவர்தான் சமுத்திர விலாச மாளிகையினின்றும் அவரை விடுவித்ததென்றும் சொனனேன். அவர் சிரித்துக்கொண்டே கண்ணை மூடிவிட்

டார். அவர் மிக அழகானவர் என்றே தெரிகிறது. ஆனால் வியாதியால் மெலிந்துபோயிருப்பதால் அவரது அழகு தென் படுவதில்லை' என்று கூறி முடித்தாள்.

அப்போது இந்திராபாய் வேடிக்கையாக, 'புஷ்பவல்லி! அவர் அழகாக இருக்கிறாரென்று அவர்மீது காதல் கொள்ள விரும்பினால் நீ அப்படிச்செய்வதில் எனக்கு ஆட்சேபமில்லை. அந்த தாதி அவரைச் சரிவரக் கவனித்து வருகிறாளா?' என்று கேட்க அவள், 'ஆம்; தாதிக்கு வேண்டிய சௌகரி யங்களையெல்லாம் நாம் அளிப்பதால் அவள் வியாதியஸ் தரை நன்றாகவே கவனித்து வருகிறாள், டாக்டரும் அந்தப் புதிய மனிதர் யார் என்று விசாரித்தார். உன் சிறியதாயார் பிள்ளையென்றும் அவரை நீ பல வருஷங்களாகப் பார்க்காமல் இருந்ததாகவும் கூறினேன். என்று சொன்னதும் இந்திரா பாய் அவளது சாமர்த்தியத்தைப் பாராட்டினாள். புஷ்பவல் லியும் தன் எஜமானியின் அருங்குணத்தைப் பற்றிப்பேச ஆரம் பித்தபோது இந்திராபாய், 'என்னைப் புகழவேண்டாம். எனக்கு அது பிடிக்காது. வியாதியஸ்தர் விழித்துக்கொண் டிருக்கிறாரா என்பதைப் பார்த்துவிட்டு வா; நான் ஆகாரம் உட்கொண்டதும் அவரைப் பார்த்துவிட்டுப் போகிறேன்' என்றாள். புஷ்பவல்லியும் அவ்வாறே பார்த்துவிட்டு வந்து வியாதியஸ்தர் விழித்துக்கொண்டு தாதியுடன் பேசிக்கொண் டிருப்பதாகச் சொன்னாள். ஆகவே இந்திராபாயும் ஆகா ரத்தை அருந்தியதும் வியாதியஸ்தரைக் காணச் சென்றாள்.

## 50-வது அத்தியாயம்

### வியாதியஸ்தர் விவரம்.

முன் அத்தியாயத்தில் நாம் பிரஸ்தாபித்த வியாதியஸ்தர் சமுத்திரவிலாச மாளிகையி னின்றும் இந்திராபாயினுல் கோகிலத்துடன் விடுவிக்கப்பட்ட வெளுத்துப்போன முகத்தையுடைய மனிதனே யாவார். அம்மாளிகையினின்றும் அனைவரும் வெளியே வந்தபின்னர் இந்திராபாய் ராட்சஸ குப்பன் முதலிய துணைவர்களுக்குச் சேரவேண்டிய பகுதியைக் கொள்ளைப்பொருளில் கொடுத்து விட்டு மீதியைத் தான் எடுத்துக்கொண்டு அப்புதிய மனிதருடன் தன் வீட்டை யடைந்தாள். அம்மனிதர் தான் விடுதலையடைந்ததாக அறிந்தவுடனே சந்தோஷத்தின் மிகுதியால் அவருக்கு ஒருவிதகொதிப்பு ஏறியதால் மயக்கத்துடன் விழுந்தார். ஆதலின் அவரைச் சௌக்தப் படுத்துவதற்காக இந்திராபாய் ஒரு தனி அறையில் அவரைப் படுக்கவைத்து பிரபல டாக்டர் ஒருவனை வரவழைத்துக் காண்பித்தாள். அடுத்த நாள் அவரைக் கவனிப்பதற்காக ஒரு தாதியும் நியமிக்கப்பட்டாள். அவர் விடுதலை யடைந்து மூன்று தினமாகிவிட்டதால் நாம் இதற்கு முன் அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி இந்திராபாய் ஆகாரம் அருந்திவிட்டு அவரைப் பார்க்க வந்தபோது அவர் ஒருவாறு சௌக்த மடைந்து இருந்தார். அவர் இந்திராபாயைக் கண்டதும் மிக ஆனந்தத்துடன், 'ஓ! என்னை விடுவித்த உபகாரியே! என தன்புள்ள சிநேகிதையே! இன்று மீண்டும் உன்னைக்காண மிக்க சந்தோஷப் படுகிறேன் என்றார். அவளும் சட்

டென அவரது கையைப் பிடித்து அன்புடனும் ஆதரவுடனும் குலுக்கிவிட்டு, 'இப்போது உங்களுக்குச் சௌகரியமாய் இருக்கிறதல்லவா,' என்று கேட்டுக்கொண்டே அருகிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள்.

அவர் அவளைப்பார்த்து, 'மாதே; நான் இப்போது மிக்க சௌகரியமாகத்தான் இருக்கிறேன். உன்னிடம் சொல்லவேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. அவற்றையெல்லாம் உன்னிடம் கூறியபிறகே என்மனம் நிம்மதியடையும், என்றார். உடனே அவளும், 'நானும் அதையெல்லாம் கேட்க மிக ஆவலுடையவளாகத் தான் இருக்கிறேன். ஆயினும் நீண்ட நேரம்வரையில் பேசிக் கொண்டிருக்க உங்களுக்குச் சக்தி இருக்கிறதா என்பதே இப்போதைய கேள்வி! என்றாள். அப்போது அப்புதிய மனிதர், 'எவ்வளவோநேரம் வேண்டுமாயினும் பேசுவேன். எனக்கு அவ்வளவு பலம் வந்திருக்கிறது ஆ! என்னுடன் அந்த சமுத்திர விலாச மாளிகையில் இருந்தாளே ஒரு அழகிய பெண்மணி, அவள் எங்கே, அவளும் நம்முடன் தானே வெளியே வந்துவிட்டாள்,' என்று மிகஆவலுடன் கேட்டார். அதற்கு இந்திராபாய், 'ஆம்; அப்பெண்ணும் நம்முடனே தான் வெளியேவந்தாள், அவளது பெயர் கோகிலம்; அவளைப்பற்றி உங்களுக்கு ஏதேனும் விவரம் தெரியுமோ' என்று கேட்டாள், 'அம்மனிதர், 'இல்லை! எனக்கு அவளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஆ, கோகிலம்! என்ன அழகான பெயர்? இப்போது அவள் எங்கே? இம்மாளிகையிலேயே இருக்கிறாளா?' என்று பரிவுடன் கேட்கவும் இந்திராபாய், 'கோகிலம் இங்கு இல்லை. அவள் அன்று இரவே தன்னுடைய வீட்டுக்குத் திரும்பி விட்டாள். அவள் உங்கள் விஷயத்தில் அதிக ஆவலுடன் இருப்பதால் இங்கே ஒரு முறை

தவருது வருவாள். வருவதாகவும் என்னிடம் உறுதிகூறி இருக்கிறுள்' என்று சொன்னுள்.

பிறகு அவள் அங்கிருந்த தாதியை வெளியே போகும் படி ஜாடை காட்டிவிட்டு அம்மணிதரைப் பார்த்து, 'இப்போது நாம் தனியாக இருப்பதால் உங்கள் விஷயத்தைப் பற்றிப் பேச ஆரம்பிப்போமே?' என்று கேட்டாள். அதற்கு அவர், 'எனக்கு ஒன்றும் ஆட்சேபமில்லை. ஆயினும் நான் எல்லா விஷயங்களையும் தொடர்ச்சியாகச் சொல்ல முடியுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. நான் ஏதேனும் ஒரு விஷயத்தை நினைக்கும்போது அதற்கு முன் நினைவுக்கு வந்த விஷயம் உடனே மறந்து விடுகிறது. என் ஞாபக சக்தியில் ஏதோ மேகம் மூடிக்கொள்வதுபோல் தோன்றுகிறது. எனினும் என்னுலியன்ற வரை சொல்லிப் பார்க்கிறேன். நான் குழந்தையாயிருந்தபோது எனக்கு ஒரு அன்பான தாய் இருந்ததாக ஞாபகம் வருகிறது. அவள் சுகானந்தம் பிரபுவின் மனைவி. சுகானந்தம் பிரபு என்பது என்னை இவ்வளவுகாலம் வரை சமுத்திர விலாச மாளிகையில் அடைத்து வைத்த தர்மலிங்கம் பிரபுவின் மூத்த சகோதரர். என் தந்தையார் நான் குழந்தையாய் இருக்கும்போதே இறந்துவிட்டதால் இவர் எங்கள் சொத்துக்களையும் பிரபுப் பட்டத்தையும் அபகரித்துக்கொண்டு விட்டார். என் சிற்றப்பன் என்னை இவ்வளவு காலமாகச் சிறையில் அடைத்து விட்டதால் உலக மக்கள் நான் இறந்துவிட்டதாக நினைத்து விட்டனர் போலும்!' என்று கூறினுர்.

அதைக்கேட்ட இந்திராபாய், 'உங்களுடைய சிற்றப்பன் செய்த கொடுமை இதுபோலும்! உங்களைக் கொன்றுவிட அவன் துணியவில்லை. ஆகவே அந்த சமுத்திர விலாச மாளிகையில் போட்டு அடைத்து வைத்தான். ஆனுல் நீங்

கள் உங்களுடைய சொத்து சுதந்தரங்களையும் பட்டத்தையும் திரும்பப் பெறுவீர் என்பது நிச்சயம். இதைத் தடுக்க உங்கள் சிற்றப்பனால் முடியப்போவதில்லை. அவனுக்கு அயோக்கியன் என்னும் பட்டம் வந்ததுதான் லாபம்,' என்றாள். இதனால் அதிக சந்தோஷமடைந்த அம்மனிதர், 'ஓ, எனதன்புள்ள உபகாரியே! நீ சொல்லும் சமாசாரம் ஆனந்தத்தைக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறதே நான் என் விஷயத்தை எனக்கு ஞாபகம்இருக்கிறவரையில் சொல்லிவிடுகிறேன் கேள் எனக்கு இப்போது வயது 28. என்னுடைய 12-வது வயதில் அதாவது 16 வருஷங்களுக்கு முன் ஒருநாள் இரவு என் சிற்றப்பனும் வீரபாலய்யாவும், மாணிக்கம் என்னும் சேவகனும் சேர்ந்து ஒரு வண்டியில் போட்டுக்கொண்டு வந்து இம்மாளிகையில் இரகசிய அறையில் அடைத்துவிட்டார்கள். அது முதல் நீ விடுவித்த நாள்வரை நான் அங்கேயே அடைபட்டுக் கிடந்தேன். நான் சிறு குழந்தையாய் இருக்கும்போதே என் தகப்பனார் வேறு தேசம் போய்விட்டார். ஆதலால் அவருடைய அடையாளமே எனக்குத் தெரியாது. என்னை இவ்வாறு சிறையில் அடைக்கும்போது என் தகப்பனார் விரைவில் திரும்பி வரப்போகிறார் என்று கேள்விப்பட்டேன். ஆனால் நான் சிறையிடப்பட்டதால் அவரைப் பார்க்க முடியவில்லை. அவர் திரும்பிவந்ததும் இறந்துபோனதாக சமுத்திர விலாச மாளிகையில் வீரபாலய்யாவும் மங்களமும் பேசியதை நான் கேட்டேன். நான் குழந்தையாயிருக்கும்போது நானும் என் தாயாரும் மற்றும் திவ்யமான ஒரு மாளிகையில் வசித்துவந்தோம். அப்போது அடிக்கடி என் சிற்றப்பன் அங்கே வந்து என் தாயாருடன் ஏதோ குசுகுசுவென்று பேசிக்கொண்டிருப்பான். அவன் போய்விட்டதும் அவள் அழுவாள், துக்கப்படுவாள். என் தாயார் சந்தோஷமாக இருந்ததை நான் பார்த்ததேயில்லை என் பெயர் சபாபதி. நான்

சிறையில் அடைபட்டபோது சமீபத்தில் அவ்விடத்திலிருந்து எப்படியாவது வெளியேறிவிட வேண்டுமென்னும் எண்ணத்துடன் ஒரு நாள் இரவு கதவைத் திறந்து பார்த்தேன். அது வெளிப் புறத்தில் பூட்டப்பட்டிருந்தது. ஆகவே நான் என் யோசனையைக் கைவிட்டேன். ஆயினும் சில தினங்களுக்குப் பிறகு எனக்கு ஒரு சாவி தோட்டத்தில் உலாவும்போது அகப்பட்டது. அதைக்கொண்டு அன்றிரவு திறந்து பார்த்ததில் கதவைத்திறந்துவிட்டது. நான் அதிக சந்தோஷத்துடன் வெளியே வந்தேன். இருட்டாய் இருந்தபடியால் சுவற்றைத் தடவிக்கொண்டே சென்றேன். சிறிது தூரம் சென்றதும் ஏதோ ஒரு முடியைப்போல் என் கைக்குப்பட்டது. அதை அமுத்தியதில் பக்கத்திலிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. உள்ளே போய்ப்பார்த்தால் அது ஒரு படுக்கை அறையாக இருந்தது. சிறிய விளக்கு எரிந்துகொண்டிருந்தது. ஜன்னல் கதவு திறந்து வைக்கப்பட்டிருந்த படியால் எதிரிலுள்ள சமுத்திரக் கரை நன்றாகத் தெரிந்தது. அங்கிருந்த படுக்கையின் மீது ஆ! ஒரு அழகிய பெண் படுத்திருந்தாள்,' என்று சொன்னதும் இந்திராபாய், 'ஓஹோ! அவள்தான் நமது கோகிலம் போலும்! அவளுடன் பேசினீர்களா,' என்று கேட்டாள்.

186575

அவர் மறுபடியும் பேச ஆரம்பித்து, 'அப்போது எனக்கு ஒன்றும் தெரியாது. அவள் என்னைக் கண்டு பயந்ததால் நான் பேசாமல் போய் என் அறையில் இருந்துவிட்டேன். மறுநாள் இரவும் அவ்வாறே சமாளித்துக் கொண்டு அப்பெண் இருந்த அறைக்குச் சென்றேன். அவளும் என்னைப்போல் ஒரு கைதியாகத்தான் இருக்க வேண்டுமென்று நினைத்தேன். அவள் விடுதலையடைவதில் நான் உதவி செய்ய வேண்டுமென எண்ணினேன். அங்குச் சென்றதும் அவள் தூங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தேன்.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்தபோதினி"ச் சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞ் பிப்ரவரி௴ 1ௗ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறுமாதங்களுக்கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். இதற்கு முன் மகா அற்புதம்பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள்" "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" "கடற்கொள்ளைக்காரன்" "இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம்" 'இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம்" 'சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி" இரத்தினபுரி ரகசியம் 3-ம்,4-ம்,5-ம்,6-ம்,7-ம் பாகம் நாவல்கள் முடிவுபெற்று அப்பொழுது இரத்தினபுரிரகசியம் 8-ம் பாகம் என்றநாவல் ஆரம்பமாகி நடந்துவருகிறது. முடிவான நாவல்கள் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக்கொள்ளவேண்டும் ; அவற்றின் தனிச் சஞ்சிகைகள் கிடையா. இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங்கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரி௴ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம். எப்பொழுது சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் ரூ. | 4 | 0 | | |
| பவளத்தீவு 2 பாகமும் ரூ. | 3 | 0 | | |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ரூ. | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |
| கடற் கொள்ளைக்காரன் 2-பாகமும் | ,, | 3 | 4 | 0 |
| இராஜாமணி அல்லது ஓர் அபூர்வ மர்மம் | ,, | 2 | 0 | 0 |
| இரத்தினபாய் அல்லது இரகசிய சங்கம் | ,, | 1 | 12 | 0 |
| சந்திராபாய் அல்லது சங்கரதாஸின் வெற்றி | ,, | 2 | 0 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்

# “ஆனந்தபோதினி”

**ஓர் இனிய மாகாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.**

இச்சஞ்சிகை 1915ஞு ஜுலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப்பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர் திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானபிவிர்த்தியையும், பெண்கல்வியையும் நோக்கமாய்க்கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதி சஞ்சிகையிலும் மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி பேர்பெற்றவர்களால் எழுதப்பட்ட அறிவு விருத்திக்கான மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரை யுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத் தக்கது. இது நமது நாட்டார து நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில் 80 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற் கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பினங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 2-0-0 மாதிரிக்காப்பி இனும்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இரத்தினபுரி இரகசியம் | ரூ. | அ. | தினகரசுந்தரி ரூபா | 1 | 0 |
| 7-பாகமும் ... | 13 | 14 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| பவளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | ரத்தினபாய் ... | 1 | 18 |
| கற்கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 10 |
| மின்சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| தேவசுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 2 |
| கனகபூஷணம்2பாகம் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| இராஜாமணி ... | 2 | 0 | பூங்கோதை ... | 0 | 12 |
| ஆனந்தவிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| மதனபூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| ஞானசெல்வாம்பாள் | | | மதனாம்பாள் 2 பாகமும் | 3 | 0 |
| 5 பாகமும் ... | 9 | 10 | லோகநாயகி | 1 | 0 |

விலாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
6, லாயர் சின்னதம்பி முதலி வீதி, சௌகார்பேட்டை, மதராஸ்.